




விலை ரூபா 40

பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 39 வள்ளுவ ஆண்டு 2055

கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை (02.12.2024)







# வெள்ளம்: 3,38,000 ஏக்கர் நெற்காணிகள் அழிந்து நாசம்

**அம்பாறை மாவட்டத்தில் 72,000 ஏக்கர் அழிந்தது; ஏக்கருக்கு 40,000 ரூபா நஷ்ட ஈடென அரசு அறிவிப்பு! 60,000 ஆக அதிகரிக்க விவசாயிகள் கோரிக்கை!!**

(முகம்மட் முக்தார்)

அண்மைய கடும்மழை, பாரிய வெள்ளம் என்பன காரணமாக விவசாயத்துறை கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக விவசாய திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடாளாவிய ரீதியில் 3,38,000 ஏக்கருக்கு மேற்பட்ட விவசாய நிலங்களை வெள்ளநீர் கழுவிச் சென்றுள்ளது. இதில் நடப்பட்டிருந்த வேளாண் பயிர்கள் யாவும் அழிவடைந்துள்ளன.

அதிகமான அழிவு அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் சுமார் 72,000 ஏக்கர் நெற்காணிகளில் செய்கை பண்ணப்பட்டிருந்த நெற்பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் வளத்தாப்பிட்டி குளத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்த நீர் வெளியேற்றப்பட்டமையினால் சம்மாந்துறை நிந்தவூர் பிரதேச நெல் வயல்கள் யாவும் முற்றாக அழிவடைந்துள்ளன.

வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்ட பாரிய மரங்களும், குப்பை கூளங்களும் வயல்களில் மலை போல் குவித்து வைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் அரிசித் தேவையில் சுமார் 30 சத வீதத்தை வழங்கும் அம்பாறை மாவட்டத்தில் விவசாய காணிகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் காரணமாக அரிசித்தட்டுப்பாடு ஏற்படலாம் (தொடர்ச்சி.) 02

## இலங்கைக்கு உதவும் பலம் சீனாவிடம் மட்டுமே

**மகாநாயக்கர் தேரிடம் சீனத்தூதுவர் தெரிவிப்பு**



(எம்.ஏ.அமீனுல்லா)

நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து விடுபட இலங்கைக்கு ஆதரவளிக்கும் பலம் சீனாவிடம் உள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் க்யூ ஷேன்ஹோங் ( *Qi Zhenhong* ) நேற்று கண்டியில் தெரிவித்துள்ளார். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால (தொடர்ச்சி...) 02

## மாவீரர் நாள் தொடர்பில் பொய்ப் பிரசாரங்கள்: மூவர் கைது

மாவீரர் தினம் தொடர்பில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்ட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் பயங்கரவாத புலனாய்வு பிரிவின் யாழ்.பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் தடைசெய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை சமூகவலைத்தளத்தின் ஊடாக பரப்புவதற்கு இந்த சந்தேக நபர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

மேலும், கடந்த வருடங்களில் மாவீரர் நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட பழைய காணொளிகளை இவ்வருட நிகழ்வுகளாக போலியாகக் காட்டி சமூக ஊடகங்களில்(தொடர்ச்சி...) 02

## விசேட சரக்கு வரி குறைப்பு



நாட்டில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் பெரிய வெங்காயத்தின் விலையில் கவனம் செலுத்தி, இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த விசேட சரக்கு வரி 30 (தொடர்ச்சி...) 02



(படம்-கியாஸ் ஷாபி)

## வழமைக்குத் திரும்பியது திருமலை...

## மலையக மக்கள் முன்னணியின் முக்கிய பதவிகளில் மாற்றம்!

**இரு வாரங்களில் கூடுகின்றது தேசிய சபை**

(க.கிஷாந்தன்)



எதிர்கால செயற்பாடுகளில் மலையக மக்கள் முன்னணி புதிய மாற்றத்திற்கு ஏற்றவகையில் மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் அதற்கான எந்த விட்டுக் கொடுப்பையும்

## மற்றுமொரு அதிசொகுசு வாகனம் மீட்பு

(கனூஷியா புஷ்பகுமார்)

பொல்கஸ் ஸோவிட்ட பகுதியில் உள்ள வாகன பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றிலிருந்து லேண்ட் ரோவர் ஜீப் வண்டி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. சட்டவிரோத (தொடர்ச்சி... 02

## மனிதநேயத்தின் பெயரால் பாலஸ்தீன மக்களுக்கு நீதி கிட்ட வேண்டும் : சஜித்



கட்சி, இனம், மதம், வர்க்கம் மற்றும் ஏனைய பேதங்களைப் பொருட்படுத்தாமல் பாலஸ்தீன மக்களின் நீதிக்காகவும் நியாயத்திற்காகவும் ஒரு நாடாக நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம்.

மனிதநேயத்தின் பெயரால் அவர்களுக்கு நீதி கிட்ட வேண்டும். இதன் பொருட்டு சர்வதேச சமூகத்துடன் கைகோர்த்து செயற்பட வேண்டும். பேச்சுக்களோடும், அறிக்கைகளோடும் சுருங்கி விடாது, பலஸ்தீன மக்களின் வாழ்வுரிமைக்காக நாமனைவரும் முன்னிற்க (தொடர்ச்சி...) 02

## பெப்ரவரி மாதத்தில் வாகன இறக்குமதி

**இறக்குமதியாளர் சங்கம்**

(கனூஷியா புஷ்பகுமார்)

நாட்டில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் வாகன இறக்குமதி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்ப்பதாக இலங்கை வாகன இறக்குமதி யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (தொடர்ச்சி..) 02

## வவுனியா குளத்தின் வான் பாயும் இடத்தில் குவிந்த மீன்கள்





( கி.வசந்தன்)

வவுனியா குளத்தின் வான் பாயும் இடத்தில் நேற்று நீருடன் பெருமளவான மீன்களும் வந்ததால் அதனைப் போட்டி போட்டு மக்கள் பிடித்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது. வவுனியாவில் பெய்த கடும்மழை (தொடர்ச்சி...) 02

## அநுரவுக்கு ரணில் பாராட்டு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டு தெரிவித்துள்ளார்.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் இணங்கி வருவதற்கு ஜனாதிபதிக்கு பாராட்டு தெரிவிப்பதாக ரணில் விக்கிரமசிங்க (தொடர்ச்சி...) 02

## பிரபாகரனின் பிறந்த தினக் கொண்டாட்டம் :விசாரணை

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் அண்மையில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 70 ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம் தொடர் பாக வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பிறந்தநாள் விழாவில் பங்கேற்ற ஐந்து பேரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (தொடர்ச்சி...) 02

## தரம் -01: பிள்ளைகளை அனுமதித்தல் - 2025

- முகம்மட் முக்தார்-

நாடளாவிய ரீதியில் உள்ள சகல அரச, அரச உதவி பெறும் மற்றும் தனியார் பாடசாலைகளில் 2025 ம் ஆண்டுக்காக முதலாம் தரத்திற்கு மாணவர்களை தேசிய மட்டத்தில் ஜனவரி 30ஆம் திகதி அனுமதிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளதாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அமைச்சின் செயலாளர் (தொடர்ச்சி..) 02

## இந்தியா - கேரளா பொலிஸாரால் தேடப்பட்டு வரும் இலங்கையர்கள்

இந்தியாவின் கேரளா– நெடும்பசேரி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட இலங்கையர்கள் உள்ளிட்ட 15 வெளிநாட்டவர்கள் தலைமறைவாகியுள்ள தாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்து ள்ளனர்.

போலி பயண ஆவணங்களுடன் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களே இவ்வாறு தலைமறைவாகியுள்ளனர்.இவர்கள் 2001 முதல் 2005 வரையான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. தலைமறைவானவர்களில் இலங் கை, நேபாளம், (தொடர்ச்சி...) 02

## எதிர்க்கட்சிகளின் பதவிகளில் மாற்றம்

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட பல எதிர்க்க ட்சி அரசியல் கட்சிகளின் உயர் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்த கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் தேர்தல்களுக்கு முகங்கொடுப்பதற்காக கட்சிப் பொறிமுறையை (தொடர்ச்சி.) 02

# மின் கட்டண திருத்த யோசனை: பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம்

மின் கட்டண திருத்த யோசனை எதிர்வரும் 6ஆம் திகதி பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படவுள்ளது. மின்சார சபை இதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

இதற்கான முன்மொழிவைத் தயாரிக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதாக மின்சார சபையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

PUCSL ලංකා විදුලිබල මණ්ඩලය இலங்கை மின்சார சபை CEYLON ELECTRICITY BOARD

பழைய முறைமைக்கு அமைவாக, மின்சாரக் கட்டணத்தை 6% முதல் 11 % வரை குறைப்பதற்கான முன்மொழிவுகளை இலங்கை மின்சார சபை முன்னர் சமர்ப்பித்திருந்தது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த முன்மொழிவை நிராகரித்தது.

அடுத்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் கட்டண திருத்த முன்மொழிவைத் திருத்துமாறு ஆணைக்குழு மின்சார சபைக்கு அறிவித்தது.

அடுத்த ஆண்டு மின்கட்டண திருத்தம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வழமைக்குத் திரும்பியது திருமலை மாவட்டம்

(படம்-கியாஸ் ஷாபி)

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது, வெள்ளம் வடிந்து வருவதால் போக்குவரத்து சேவைகள் உட்பட அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பி இருக்கின்றன.



இந்த மாவட்டத்தில் கன மழையினால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை கடந்த பத்து தினங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்டிருந்தது.

திருகோணமலை –மட்டக்களப்பு பிரதான வீதி மற்றும் வெருகல் பகுதியில் தடைப்பட்டிருந்த பிரதான போக்குவரத்து என்பன தற்போது வழமைக்குத் திரும்பியிருக்கின்றன.

இதேவேளை, கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக தொழிலுக்குச் செல்ல முடியாது, தங்களுடைய வாழ்வாதாரங்களை இழந்த நிலையிலிருந்த மீனவர்கள் நேற்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையை காண முடிந்தது.

# ஐ.சி.சியின் புதிய தலைவராக பொறுப்பேற்றார் ஜெய் ஷா

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவராக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்ட ஜெய் ஷா நேற்று (01)முதல் ஐ.சி.சி. தலைவராகப் பொறுப்பேற்றார்.



மத்திய உள்துறை அமைச்சரான அமித்ஷாவின் மகனும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் பொதுச் செயலாளருமான ஜெய் ஷா 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் செயலாளராகவும், 2021 ஜனவரி முதல் ஆசிய கிரிக்கெட் பேரவையின் தலைவராகவும் பணியாற்றி நேற்று (01) முதல் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் (ஐ.சி.சி) தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

முன்னதாக சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவராக இருந்த நியூசிலாந்தைச் சேர்ந்த கிரேக் பார்கிளேவின் பதவிக்காலம் கடந்த நவம்பர் 30ஆம் திகதி முடிவுக்கு வந்தது. இதையடுத்து ஐசிசி தலைவராக ஜெய் ஷா போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் நேற்று மன்னார் விஜயம்

மன்னாரில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு பாதுகாப்பு மையங்களில் தங்கி வாழும் மக்களை மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் நேற்று நீரில் சென்று பார்வையிட்டார்.

.ஞாயிற்றுக் கிழமை (01) மன்னாருக்கு வருகை தந்திருந்த இக்குழுவில் மகளிர் மற்றும் சிறுவர் விவகார பிரதி அமைச்சர் வைத்திய கலாநிதி நாமல் லக்ஸ்மன், பாராளுமன்ற உறுப்பினர் சமன்வெளி குணசிங்க,அமைச்சின் செயலாளர்கள் உட்பட இவர்களுடன் மன்னார் நகர் பிரதேச செயலாளர் எம் பிரதீப் மற்றும் மன்னார் மாவட்ட செயலக மேலதிக செயலாளர் (காணி) ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோரும் இது இந்த விஜயத்தில் பங்கேற்றனர்.

தாழ்வுபாட்டு வீதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் பெண்கள் சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது.

இங்கு விஜயத்தை மேற்கொண்ட மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் மக்கள் மத்தியில் உரையாற்றும்போது

அரசு பொறுப்பேற்றதுடன் மக்களுக்கு நிறைய அபிவிருத்தி வேலைகளை செய்ய வேண்டும் என்ற அபிலாசையில் இருந்து வருகின்றது.

## எதிர்க்கட்சிகளின்...

பலப்படுத்த வேண்டியிருப்பதால் எதிர்க்கட்சிகள் அனைத்தும் மறுசீரமைக்கப்பட வேண்டும் என ஏற்கனவே கருத்துக்கள் எழுந்துள்ளன.

மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் இந்த நிலை மாற்றங்கள் நடைபெறுவதாகத் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் குறைபாடுகளை ஆய்வு செய்வதற்காக சிறப்புக் குழுக்களை நியமிக்க அந்தந்த கட்சித் தலைவர்கள் உத்தேசித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் மேற்கொள்ளப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக கட்சியின் பேச்சாளர் ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்பு வழங்கவும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

## மலையக மக்கள்...

தான் செய்வதற்குத் தயா ராக இருப்பதாகவும் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிவடைந்த பாராளுமன்ற தேர்தலின் பின்பு மலையகத்தின் பல கட்சிகளிலும் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களின் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று அண்மையில் தலவாக்கலையில் நடைபெற்றுள்ளது.

இந்த கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் எதிர்கால நடவடிக்கைகள் எதிர்வரும் வருடங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள், மாகாண சபை தேர்தல் ஆகியவற்றை எவ்வாறு எதிர் கொள்வது என்பது தொடர்பாக இந்த கூட்டத்தில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது கலந்து கொண்ட முக்கியஸ்தர்கள் எதிர்வரும் தேர்தல்கள் அனைத்திலும் மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர்.இதற்குக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளனர்.இது தொடர்பாக இறுதி தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக ஐவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டதாக முன்னணியின் பெயர் குறிப்பிட விரும்பாத முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் மலையக தொழிலாளர் முன்னணியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் புதியவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் விரிவாக பேசப்பட்ட நிலையில் இது தொடர்பில் ஒரு வாரத்தில் தனக்கு அறிக்கை ஒன்றைப் பெற்றுத் தருமாறு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் உத்தரவிட்டுள்ளார்.

எதிர்வருகின்ற அனைத்து தேர்தல்களிலும் மலையக மக்கள் முன்னணி எவ்வாறு செயற்பட வேண்டும் அதற்கான நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் மலையக மக்கள் முன்னணியில் புதியவர்கள் பலர் இணைந்து கொள்வதற்கு தற்பொழுது கலந்துரையாடல்கள் இடம்பெறுவதாகவும் இது தொடர்பாக இறுதித் தீர்மானம் மிக விரைவில் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன் மலையக மக்கள் முன்னணியின் தலைமைத்துவத்திலும் செயலாளர் பதவியிலும் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.இந்த மாற்றங்கள் தொடர்பாக இரண்டு வாரங்களில் தேசிய சபையில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் முன்னணியின் முக்கியஸ்தர் தெரிவித்துள்ளார்.

## விசேட சரக்கு...

ரூபாவிலிருந்து 10 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூர் விவசாயிகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் நுகர்வோருக்கு நியாயமான விலையாக அமையும், பெரிய வெங்காயத்துக்கான குறைக்கப்பட்ட விசேட சரக்கு வரி கடந்த நவம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் இம்மாதம் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## தரம் 01..

கலுவேவ அறிவித்துள்ளார்.

மாணவர்களை முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக தனியான வைபவங்களை ஏற்பாடு செய்வது அவசியமற்றது எனவும் முதலாம் தர புதிய மாணவர்களை சிரேஷ்ட மாணவர்களைக் கொண்டு அன்புடனும், சிநேகமுடனும், இன்முகத்துடன் வரவேற்பதுடன் நிகழ்வுகளை மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனவரி 30 ம் திகதி மாணவர்களை அனுமதித்த பின் ஜனவரி 31 ம் திகதி முதல் பெப்ரவரி 17 ம் திகதி வரை “பத்து நாட்களுக்குள் பிள்ளைகளை இனம்காணும் வேலைத்திட்டத்தை” ஆரம்பித்து பிள்ளைகளை முறையாக இனங்காண வேண்டுமெனவும் அதிபர்களை அறிவுறுத்துவதாகவும் கல்வியமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

இதே வேளை முதலாம் தரத்திற்கு அனுமதிப்பதற்காக எவ்வித பணமோ, பரிசுப் பொருட்களோ பெற்றுக்கொள்வது தண்டனைக்குரிய குற்றமெனவும் இவ்வாறான செயற்பாடுகளிலிருந்து பாடசாலை அதிபர்கள் விலகி இருக்க வேண்டுமெனவும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு பாடசாலை ஆசிரியர்களோ, பாடசாலை அபிவிருத்தி குழு, அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் ஈடுபடுத்தப்படக்கூடாது எனவும் கல்வி அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## அநுரவுக்கு...

தெரிவித்துள்ளார்.

கொழும்பு அமாரி ஹோட்டலை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே முன்னாள் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அமாரி கொழும்பு ஹோட்டல் குழுமமானது கொழும்பில் உள்ள இலங்கை தொழிலதிபர் ஒருவருக்கு சொந்தமான முதல் ஐந்து நட்சத்திர சர்வதேச ஹோட்டலாகும்.

வினில் மெனிக் நிறுவனத்தின் உரிமையாளர் டபிள்யூ.வினில் அதற்குத் தலைமை தாங்குகிறார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் விஜித ஹேரத், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பல அதிதிகள் ஹோட்டல் திறப்பு விழாவில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பெப்ரவரி...

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உரிய முறையில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் அங்கு கருத்து வெளியிட்ட இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத் மெரிஞ்சிகே,

“பெப்ரவரியிலிருந்து நிச்சயமாக வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும்.” ஏனெனில் இந்த அரசாங்கம் எமக்கு ஒரு கொள்கையாக வாகன இறக்குமதியை அனுமதிப்பதாக ஒரு உறுதியை வழங்கியுள்ளது.நாங்கள் வாகனங்களை இறக்குமதி செய்யத் தயாராக உள்ளோம். மேலும், இதன் மூலம் மக்கள் நியாயமான விலையில் நல்ல வாகனத்தைப் பெற முடியும்.

வாகனங்களின் இறக்குமதி நடவடிக்கையை முன்னெடுக்க பல விடயங்கள் உள்ளன. வாகன இறக்குமதிக்கான கொள்கையைத் தயாரிப்பதற்காக நிதியமைச்சகம் குழுவொன்றை நியமித்துள்ளது.

பெப்ரவரி முதல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான பணத்தை ஒதுக்க மத்திய வங்கி விருப்பம் தெரிவித்துள்ளது.

மேலும், வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு சர்வதேச நாணய நிதியமும் ஒப்புதல் அளித்துள்ளதாக தெரியவந்துள்ளது.” எனத் தெரிவித்தார்.

## இலங்கைக்கு...

இடையிலான நீண்டகால நட்பை உடைக்க சில நாடுகள் முயற்சிப்பதாகவும், இது குறித்து இரு நாடுகளும் கவனம் செலுத்துவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அஸ்கிரி மகாநாயக்கர் அதி வணக்கத்திற்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரதன உள்ளிட்ட சில முக்கிய மகாநாயக்கர்களினது ஆசிகளைப் பெற்றுக்கொண்ட போதே சீனத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய, சீனத் தூதுவர் க்யூஷேன்ஹோங்.

இலங்கையை நட்பு நாடாக அபிவிருத்தி செய்ய சீனா விரும்புவது மட்டுமன்றி, அதற்கு ஆதரவை வழங்குவதற்கும் எப்போதும் உழைத்து வருகிறது. இலங்கை மக்கள் புதிய ஜனாதிபதியையும், புதிய அரசாங்கத்தையும் தெரிவு செய்துள்ளமை தொடர்பில் தாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் , புதிய அரசாங்கத்திற்கு முன்னர் போன்று சீனாவின் ஆதரவு வழங்கப்படும் என்பதில் சீனா உறுதியாகவுள்ளது

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நட்புறவை யார் முறியடிக்க முயற்சித்தாலும் அது வெற்றியடையாது என்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பௌத்த பந்தம் ஒருபோதும் துண்டிக்கப்படாது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலிருந்து விடுபட இலங்கைக்கு ஆதரவளிக்கும் பலம் சீனாவிடம் உள்ளது என்பதாகவும் அவர் மேலும் வலியுறுத்திக்கூறினார்.

## மாவீரர் நாள்...

சந்தேக நபர்கள் பரப்பியுள்ளதாக தெரியவந்துள்ளது.

விசாரணைகளையடுத்து இந்த மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

28, 35 மற்றும் 45 வயதுடைய சந்தேகநபர்கள் மருதானை, சுன்னாகம் மற்றும் பத்தேகம பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

தடை செய்யப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் இணையத்தில் பொய்யான படங்கள், காணொளிகளைப் பரப்பியமை மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பை தூண்டுதல் போன்ற காரணங்களுக்காக பயங்கரவாத தடைக்கான தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தின் விதிகளின் கீழ் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பிரபாகரனின்...

வல்வெட்டித்துறையில் விடுதலைப் புலிகளின் தலைவரது குடும்பத்தின் பூர்வீக இல்லத்தில் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் புகைப்படத்தினை கொண்ட பதாகை ஒன்றும் அச்சிடப்பட்டு அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் போது அங்கு வந்திருந்த வல்வெட்டித்துறை பொலிஸார் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடைய புகைப்படத்தினை பயன்படுத்த முடியாது என்றும், அதற்கு சட்டத்தில் இடமில்லை என்றும் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து குறித்த புகைப்படத்தினை மறைத்துவிட்டு பிறந்தநாள் கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

யாழில் நடந்த பிறந்தநாள் கொண்டாட்டம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன .

## வெள்ளம்...

என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 40,000 ரூபா வீதம் நஷ்ட ஈடு வழங்கப்படவுள்ளதாகவும் அதற்காக திறைசேரி முதற்கட்டமாக 1000 மில்லியன் ரூபாக்களை ஒதுக்கியுள்ளது எனவும் விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரட்ண கூறுகிறார்.

கமநல காப்புறுதி சபையூடாக இக்கொடுப்பனவு வழங்கப்படுமென கூறப்படுகிறது. கமநல காப்புறுதியை பெற்றுக்கொள்ளாத விவசாய நிலங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படுமா என்ற தெளிவற்ற நிலையும் காணப்படுகிறது.

எவ்வாறாயினும் அரசாங்கத்தின் நஷ்ட ஈடு பாதிக்கப்பட்ட சகல விவசாய காணிகளுக்கும் வழங்கப்பட வேண்டுமெனவும் நஷ்ட ஈடு குறைந்தது ஏக்கருக்கு 60,000 ரூபா வரை அதிகரிக்கப்பட வேண்டுமெனவும் விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேலும் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்ட விவசாய காணிகளின் பாதுகாப்பு தடுப்புக்

களான சேதமாக்கப்பட்ட அணைக்கட்டுக்களை நீர்ப்பாசன திணைக்களம் மூலம் திருத்தி அமைத்துத் தருமாறும் விவசாயிகள் கோரியுள்ளனர்.

## மற்றுமொரு...

பொருத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

மேல்மாகாண குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றுக்கு அமைய குறித்த வாகனம் மீட்கப்பட்டுள்ளது.

வாகனம் பழுதுபார்க்கும் நிலைய உரிமையாளரிடம் வினவிய போது, சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் மஹரகம பிரதேசத்தில் உள்ள விகாராதிபதி ஒருவரினால் லேண்ட் ரோவர் ரக ஜீப், வண்டி, செஸி, நான்கு டயர்கள் மற்றும் பழைய இயந்திரம் என்பன கொண்டு வந்து தரப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

அதனை பழுதுபார்ப்பதற்குத் தேவையான உதிரிப்பாகங்களை அவர் அவ்வப்போது கொண்டு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந்த வாகனத்தை குறித்த இடத்திற்கு வழங்கியதாகக் கூறப்படும் விகாராதிபதியிடம் வாக்குமூலம் பெறப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தற்போது, குறித்த ஜீப் வண்டி மேலதிக விசாரணைகளுக்காக கெஸ்பேவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாவடிப்பள்ளி அனர்த்தம்

# மரணமடைந்தோரின் வீடுகளுக்கு சென்று ஆளுநர் அனுதாபம்



(முகம்மட் முக்தார்)

காரைதீவு பிரதேச செயலக மாவடிப்பள்ளி தாம்போதியில் உழவு இயந்திரம் குடை சாய்ந்தமையால் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்த நிந்தவூர் காசிபுல் உலூம் அரபுக்கல்லூரி மாணவர்களான சம்மாந்துறையைச் சேர்ந்த மாணவர்கள் ஆறு பேரினதும் மற்றும் மரணமடைந்த , உயிர்பிழைத்த மாணவர்களின் வீடுகளுக்கு நேற்று முன்தினம்(30) கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ரத்னலால் ஜயசேகர, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம ஆகியோர் நேரடியாக சென்று தமது அனுதாபங்களை தெரிவித்துக் கொண்டார்கள். உயிரிழந்த மாணவர்கள் ஒவ்வொருவருடைய வீடுகளுக்கும் சென்ற அவர்கள், பெற்றோர்களையும் குடும்ப உறுப்பினர்களையும் சந்தித்து தமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொண்டதுடன் உயிரிழந்தவர்களுக்கான அரசின் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றுத்தருவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை, சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பொலிவேரியன் எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் மக்களை கிழக்கு ஆளுநர் ரத்னலால் ஜயசேகர நேற்று முன்தினம்(30) பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

இப்பாடசாலையில் அக்கிராமத்தைச் சேர்ந்த 90 குடும்பங்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான சமைத்த உணவுகளை சாய்ந்தமருது பிரதேச செயலகம் மற்றும் சமூக நல அமைப்புக்கள் வழங்கி வருகின்றன. இவர்களுடன் சாய்ந்தமருது பிரதேச செயலாளர், சம்மாந்துறை பிரதேச செயலாளர், உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இணைந்திருந்தனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்திகை மாதம் 17ஆம் நாள் திங்கட்கிழமை

**மேஷம்:** இன்று செலவுகள் குறைவாகையால் பண விரயம் ஏற்படாது

**ரிஷபம்:** பலவீனமாக இருப்பதால் நீண்டதூர பயணத்தை தவிர்த்திடுங்கள்.

**மிதுனம்:** இன்று பொருளாதார நிலைமை நன்றாக இருக்கும், பணவரவு கணிசமாக இருக்கும்

**கடகம்:** உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் விஷயங்களைச் செய்தால் பலன் கிடைக்கும்.

**சிம்மம்:** நெருக்கடியான நேரங்களிளிலும் பொறுமையை இழக்காதீர்கள்.

**கன்னி:** நிதிப் பிரச்சினை காரணமாக சில முக்கியமான வேலை தடைப்படும்

**துலாம்:** முடிவு எடுக்கும்போதும் உங்கள் நிலையை விட்டுக் கொடுக்காமல் இருக்கவும்.

**விருட்சிகம்:** இன்று செய்யும் தர்மகாரியம் உங்களுக்கு மன அமைதி மற்றும் சவுகரியத்தைத்தை தரும்.

**தனுசு:** இன்று உங்களுக்கு பணம் பணக்கஷ்டம் இருக்கும். தடுமாற்றம் ஏற்படும்.

**மகரம்:** பொருளாதாரத்தில் புதியகடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள்.

**கும்பம்:** தொழில்துறையினர் மற்றும் வியாபாரிகள் புதிய முதலீடு செய்து தொழில்விரிவாக்கம் செய்யலாம்.

**மீனம்:** உங்களை ஈர்க்கக் கூடிய முதலீட்டுத் திட்டத்தில் பணத்தை செலவிடுங்கள

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** அமாவாசை திதி மதியம் 12:19 PM அதன் பிறகு பிரதமை திதி.

**நட்சத்திரம்:** அனுஷம் நட்சத்திரம் மதியம் 03:23 PM அதன் பிறகு கேட்டை நட்சத்திரம்.

**யோகம்:** மரண யோகம்.

**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** அசுவினி, பரணி.

**இராகு காலம்:** மதியம் 04:30 PM முதல் 06:00 PM வரை,

**குளிகை:** மதியம் 03:00 PM முதல் 04:30 PM வரை,

**எமகண்டம்:** மதியம் 12:00 PM முதல் 01:00 PM வரை,

# எரிபொருள் விலைகளில் மாற்றம்



மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் படி சனிக்கிழமை (30) நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருளின் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, 311 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 02 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 309 ரூபாவாகும். 283 ரூபாவாக விற்கப்பட்ட ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 03 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 286 ரூபாவாகும். எனினும் மண்ணெண்ணெய் 05 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு 188 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஒக்டேன் 95 ரக பெற்றோல் விலையிலும், சுப்பர் டீசலின் விலையிலும் எவ்விதமான மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை எனவும் ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் தற்போதைய விலை - 371 ரூபாவாகவும் சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் தற்போதைய விலை - 313 ரூபாவாகவும் தொடர்ந்தும் விலைமாற்றமின்றி விற்பனை செய்யப்படும் எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலை திருத்தங்களுக்கு நிகராக லங்கா ஐஓசி மற்றும் சினொபெக் ஆகிய நிறுவனங்களும் தங்களின் எரிபொருள் விலைகளைக் குறைத்துள்ளன.

### தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட


## அரசா உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு நிலுவையிலுள்ளதாக புகார்

ஜனாதிபதித் தேர்தலுக்காக களுத்துறை மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பெருமளவிலான அரச உத்தியோகத்தர்களுக்கு இதுவரை தேர்தல் கொடுப்பனவுகள் கிடைக்கவில்லை என பெருமளவிலான அரச ஊழியர்கள் விசனம் தெரிவிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கல்வித்துறையிலும், உள்ளூராட்சி அமைப்புகள் உள்ளிட்ட பல நிறுவனங்களில் பணி புரியும் அரச அதிகாரிகள் தங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் வழங்கப்படவில்லை என முறைப்பாடு செய்துள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தின் பொலிஸ் உத்தியோகத்தர்களைத் தவிர, ஏறக்குறைய ஒன்பதாயிரம் அரச அதிகாரிகள் ஜனாதிபதித் தேர்தலுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 155 வருட பழமையான வளிமண்டலவியல் கட்டிடம் சேதம்



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சமீபத்திய சீரற்ற காலநிலை, பெருமழை மற்றும் வெள்ளத்தினால் மட்டக்களப்பில் இயங்கி வந்த 155 வருட கால பழமை வாய்ந்த வளிமண்டலவியல் திணைக்கள அலுவலகக் கட்டிடம் சேதமடைந்துள்ளது. இது தொடர்பாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜ/லேகாவின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளார். இதனையடுத்து மாவட்டச் செயலகத்தை அண்டி அமைந்துள்ள, சேதமடைந்த மாவட்ட வளிமண்டலவியல் திணைக்கள அலுவலகக் கட்டிடத்தை மாவட்டச் செயலாளர் சனிக்கிழமையன்று (30) நேரில் சென்று பார்வையிட்டார். சேதம் பற்றி மாவட்டச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டதின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட வளிமண்டலவியல் திணைக்கள அலுவலகத்திற்கான புதிய கட்டிடம் ஒன்றினைப் பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு வளிமண்டலவியல் திணைக்கள நிலைய பொறுப்பதிகாரி எம். ஏ. எம். சாதிக் தெரிவித்தார். சேதமடைந்துள்ள கட்டிடத் தொகுதியைப் பார்வையிட்ட மாவட்டச் செயலாளர், மாவட்ட வளிமண்டல திணைக்கள அலுவலகத்திற்கான புதிய கட்டிடம் ஒன்றினை வழங்குவதற்காக ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதாக வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகளிடம் உறுதியளித்துள்ளார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு சகல உதவிகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை

### சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே தெரிவிப்பு



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்துவிதமான உதவிகளையும் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக மட்டக்களப்பில் அதிகாரிகளைச் சந்தித்த கிராமிய அபிவிருத்தி,சமூகப் பாதுகாப்பு, சமூக வலுவூட்டல் அமைச்சர் கலாநிதி உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெள்ள இடர் பாதிப்புக்கள் தொடர்பில் ஆராயும் உயர்மட்டக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் வலுசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயகொடி, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு,தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு அமைப்பாளர் எம்.பி.எம்.பிர்தெளஸ் உட்பட இடர் முகாமைத்துவப் பிரிவினர், திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில், வெள்ள இடருக்குப் பின்னரான மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் இடர்களினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்தும் பொதுமக்களின் பாதுகாப்பு, அவர்களுக்கான உணவு, சுகாதார நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பான பயண ஏற்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இங்கு நிகழ்வில் கருத்து தெரிவித்த சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே, மட்டக்களப்பு மாவட்டத்தில் பெருமளவான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. விவரங்கள் பெறப்பட்டதும் இழப்பீடுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

# மின்சாரம் தாக்கி முதியவர் பலி



(செ.திவாகரன் டி.சந்ரு)

கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெதமுல்ல தோட்டத்தில் சனிக்கிழமை (30) இரவு மின்சாரம் தாக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

பகுதியில் மரக்கறி தோட்டத்தை காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக வேலியில் இணைக்கப்பட்ட மின்சார இணைப்பிலிருந்து மின்சாரம் தாக்கி அந்த முதியவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே தோட்டத்தில் குரங்கு விரட்டும் தொழிலில் ஈடுபட்டு வந்தவர் எனவும் வழக்கம் போல் விவசாய காணிக்குத் தொழிலுக்குச் செல்லும்போது மின்சார வேலியில் வழுக்கி விழுந்து உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் வெதமுல்ல தோட்டத்தைச் சேர்ந்த 67 வயதுடைய தங்கவேல் கிருஷ்ணராஜ் என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சடலம் மீட்கப்பட்டது. சடலத்தைப் பார்வையிட்ட நீதவான் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸாருடன் நுவரெலியா தடயவியல் பொலிஸார் இணைந்து முன்னெடுத்தனர்.

# இந்தியா-கேரளா பொலிஸாரால் தேடப்பட்டு வரும் இலங்கையர்கள்

இந்தியாவின் கேரளா- நெடும்பசேரி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட இலங்கையர்கள் உள்ளிட்ட 15 வெளிநாட்டவர்கள் தலைமறைவாகியுள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலி பயண ஆவணங்களுடன் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களே இவ்வாறு தலைமறைவாகியுள்ளனர். இவர்கள் 2001 முதல் 2005 வரையான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

தலைமறைவானவர்களில் இலங்கை, நேபாளம், பிரான்ஸ், ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். சுரங்க பிரதீப் (47) அனுராதபுரம், நீல் (42) வடமராச்சி, நாராயண முதியன்சலகே நிஹால் (58) புத்தளம், டபாகே ஸ்ரீமாலிகா மெலமி பெர்னாண்டோ (44) புத்தளம், டோர்ஜி (61) நேபாளம், மனோகரன் (62)யாழ்ப்பாணம், சிவராமகிருஷ்ணன் (40) முல்லைத்தீவு, மங்காயத் கராபி (56) யாழ்ப்பாணம், சந்திரலிங்கம் நடராஜ் (68) பிரான்ஸ், தம்பிராஜ் யோகேந்திரம் (58) யாழ்ப்பாணம், பிரேமானந்தி (40) முல்லைத்தீவு, கவிதா (45) வடமராட்சி, துசாரா தமயந்தி (44) புத்தளம் இவர்கள் செங்கமாநாடு பொலிஸ் நிலையத்தில் கடவுச்சீட்டு சட்டம் மற்றும் வெளிநாட்டினர் சட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் கைது செய்யப்பட்டு பின்னர், விசாரணைக்காக எர்ணாகுளம் குற்றப்பிரிவு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். எனினும். தற்போது குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீதான வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளதால், இவர்களை குற்றப்பிரிவு பொலிஸார் தேடி வருகின்றனர். இவர்களைப் பற்றிய தகவல்களை 0484-2551158 மற்றும் 9497987292 என்ற எண்களில் குற்ற தடுப்புப் பிரிவுக்கு அனுப்பலாம் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5,Dr Danister De Silva Mawatha, Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# கரை புரண்டோடும் வெள்ளம்; அழுத்திச் சொல்லும் செய்தி

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்கள். இன்னும் பாதிப்பில் இருந்து மீளவில்லை. கொட்டித் தீர்த்த மழையால், வெள்ளம் கரை புரண்டோடிய மாவட்டங்கள் இவை.

கனத்த மழை குறைந்துவிட்டது வானமும் வெளுத்து விட்டது. ஆனால், பாதிப்பிலிருந்து மக்கள் மீண்டெழ முடியாமல் திண்டாடுகிறார்கள் என்பது கவலைக்குரிய விடயம்.

இந்த இரண்டு மாவட்டங்களிலும், வெள்ளம் வந்ததா...? அல்லது சுனாமி தாக்கியதா...? பாதிப்பின் அஹோரத்தை இப்படித்தான் பார்க்கத் தோன்றுகிறது.

தரைவழிப் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டிருக்கின்ற நிலையில். இரண்டு மாவட்டங்களும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பும் என்று இப்போதைக்கு கூற முடியாது.

சீரற்ற கால நிலையினால், நாட்டில் சுமார் ஐந்து இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். 17 க்கு மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏதிலிகளான ஆயிரக்கணக்கானோர் இடைத்தங்கல் முகாம்களில் இன்னும் தங்கி இருக்கிறார்கள்.

இவையெல்லாம் நீங்கள் அறிந்த விடயங்கள் தான்.

ஆனால், இந்த மாவட்டங்களில் அடிக்கடி ஏற்படுகின்ற வெள்ள நிலை, அழுத்தமான செய்திகளை சொல்லிவிட்டு தான் சென்றிருக்கின்றன. அதேபோல், இந்த அனர்த்தமும் பாடம் புகட்டி இருக்கிறது.

கரைபுரண்டு ஓடும் வெள்ளம் பள்ளத்தை நோக்கித்தான் செல்லும். ஓடும் வழியில் தடைகள் வந்தால், தகர்த்தெறிந்து இலக்கை எட்டுவது தான் அதனது இயல்பு..

இந்த வெள்ள அனர்த்தத்தில், உயிர் இழப்புகளை அதிகம் சந்தித்த மாவட்டம் அம்பாறை மாவட்டம். வீதியை கடக்க முயன்ற, 8 அப்பாவிகள் வெள்ளத்தில் அள்ளுண்டு போனார்கள். நிந்தவூர் மதரசாவில் கல்வி கற்ற ஆறு மாணவர்களும் அவர்களை உழவியந்திரத்தில் ஏற்றி சென்ற, சாரதியும் இன்னும் ஒருவரும் உட்பட எட்டு பேரும் அந்த இடத்திலேயே உயிரிழந்து விட்டார்கள்.. பலத்த தேடுதலின் பின்பு 08 சடலங்களும் மீட்கப்பட்டு விட்டன.

இதேபோல், கல்முனை கிட்டங்கி வீதியை கடக்க முயன்ற, பாண்டிருப்பைச் சேர்ந்த இன்னும் ஒரு குடும்பஸ்தரும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, பின்பு சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

மட்டக்களப்பு மாவட்டமும், தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்ற அதே நேரம், இந்த வெள்ளத்திலும் கடுமையாக மூழ்கியது. முற்றிலும் எதிர்பாராத வெள்ளப்பெருக்கினால் கிராமங்களுக்கிடையிலான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டன. வெள்ளத்தினால் முற்றுகையிடப்பட்ட பலர் விமானப்படை உதவியோடு மீட்கப்பட்டார்கள். இப்படி வாவியும் கடலும், சங்கமித்து பாரிய இழப்புகளை ஏற்படுத்தி விட்டன.

இவையெல்லாம் இயற்கை அனர்த்தங்கள் என்று சொல்லிவிட்டு சும்மா நகர்ந்து செல்ல முடியாது. இந்த மாவட்டங்களில் ஏற்பட்ட அழிவுகளுக்கு, அரசாங்கமும் பிரதேச அரசியல்வாதிகளும் முழுப் பொறுப்பினை ஏற்க வேண்டும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள,காரைதீவு சந்தியிலிருந்து, சம்மாந்துறை நோக்கி செல்லும் வீதியில், மாவடிப்பள்ளி அமைந்துள்ளது. நிந்தவூர் என்ற இடத்தில் உள்ள மதரசாவில் கல்வி கற்று வருகின்ற மாணவர்கள் ஆறு பேர் இந்த இடத்தில் தான் அனர்த்தத்தை சந்தித்தார்கள்., அதாவது,காரைதீவு சந்திக்கும் சம்மாந்துறை சந்திக்கும் இடைப்பட்ட பிரதேசமே இதுவாகும். கிட்டங்கி தாம்போதியை நோக்கி, சாதாரணமாக ஓடும் தண்ணீர், வெள்ள நிலை ஏற்படும் பொழுது கரை புரண்டு ஓடுவது வழமை.

சுமார் நூறாண்டு கால வரலாற்றைக் கொண்ட இந்த தாம்போதி, பொறியியலாளர் குழுக்களால் திருத்தப்படுவதும், அது உடைத்துச் செல்லப்படுவதும் காலம் காலமாக நடந்து கொண்டே இருக்கிறது. இதற்கொரு மேம்பாலம் அமைப்பது தொடர்பில் யாருமே கண்டு கொள்ளவில்லை.

இதேபோல், கல்முனை மாநகரிலிருந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிட்டங்கி என்று அழைக்கப்படும் தாம்போதி, இதுவரைக்கும் ஏராளமான உயிர்களை காவு கொண்டு இருக்கிறது. இந்தப் பிரதேச மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு, உந்து சக்தியாக இருக்கின்ற பாலம் இது. விளைகின்ற உற்பத்தி பொருட்களை, பரஸ்பரம் எடுத்துச் செல்ல இந்தப் பாலம் தான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்து விளங்குகின்றது. சேனநாயக்க சமுத்திரத்திலிருந்து திறந்து விடப்படும் நீர், கடலோடு சங்கமிப்பதற்காக வார்ந்தோடி செல்லும் இடம் இது.

வீதியில் செல்பவர்களை வெள்ளம் அடித்துச் செல்வது ஒரு புறம், முதலைகள் இழுத்துச் செல்வது இன்னொரு புறமுமாக மக்கள் காலங்காலமாக துன்பங்களை அனுபவிக்கிறார்கள். மட்டக்களப்பு மாவட்டமும் இதே நிலைதான், நீரினால் சூழப்படும் இடங்களுக்கு செல்வதற்கு மேம்பாலங்கள் அல்லது உயரமான பாலங்களை அமைத்தால், அனர்த்தங்களுக்கு அப்பால், காவு கொள்ளப்படும் உயிர்களையாவது காப்பாற்ற முடியும்.


ஆகவே, அனர்த்தங்கள் ஏற்படுகின்ற பொழுது, இயற்கையின் தலையில் போட்டுவிட்டு, அரசியல்வாதிகளும் அரசாங்கமும் தப்பிவிட முடியாது. கோடி கோடியாய் கொமிஷனும், கொள்ளையும் அடிப்பதில் ஆர்வம் காட்டிய அரசியல்வாதிகள் எல்லாம், மக்களை பாதுகாக்க, முழுப்பொறுப்போடு செயல்படவில்லை.

இப்படியான விடயங்களில், அரசாங்கத்தை தட்டி எழுப்ப வேண்டியவர்கள் பிரதேச அரசியல்வாதிகளே. ஆனால், அவர்கள் அதற்கான திட்டமிடலை சொல்லவில்லை. மாவடிப்பள்ளி வீதியை ஒரு தடவை திருத்தினார்கள். எனினும் அது முறையாக பலன் கொடுக்கவில்லை.

வாக்குகளை மக்களிடம் பெறுகின்றவர்களின் பம்மாத்துத்தனங்களால்தான், மேம்பாலத்துக்கான திட்டமிடல்கள் இல்லாமல் போனது. கொழும்பில் கண்ட இடங்களில் எல்லாம் மேம்பாலம் கட்டப்படும் போது, இங்கு இரண்டு மேம்பாலங்களை கட்டுவது , அரசுக்கு சிரமமாக இருக்காது.

ஆகவே வெள்ளம், அது செல்லும் வழியை அடையாளம் காட்டிவிட்டது. அதன் வழியில் குறுக்காக நிற்காமல் நமது வழியில் மேம்பாலத்தின் மேல் செல்வது தான் புத்திசாலித்தனம்.

மாற்றங்களை எதிர்நோக்கிய நிலையில் வந்திருக்கின்ற அரசாங்கம், அம்பாறை மாவட்டத்தில் மாத்திரமல்ல, நாடு முழுவதும் இது போன்ற செயல் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.




# அடிமை முறை ஒழிப்பு தினம் இன்று

துூ.சிந்துஜா

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி சர்வதேச அடிமை முறை ஒழிப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இத் தினமானது ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மிக முக்கிய தினம் என்பதோடு, முதன் முதலில் 1986 ஆம் ஆண்டு இது அனுஷ்டிக்கப்பட்டது.

எத்தனையோ விதமான தினங்கள் அனுஷ்டிக்கப்பட்டாலும் இந்த அடிமை முறை ஒழிப்பு தினம் என்பது உலகளாவிய ரீதியில் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகிறது.

தன்னுரிமை இழந்து பிறருக்கு வேலை செய்யும் அல்லது பிறரின் கட்டளைகளுக்கு இணங்கி நடப்பதே அடிமைத்தனம் எனப்படுகிறது.

காலம் காலமாக ஒரு சாரார் இன்னொரு சாராருக்கு அடிமைப்பட்டு கிடப்பதே வாடிக்கையாகிவிட்டது.

இது வெளிநாட்டவர் நம் நாட்டுக்கு வருவதற்கு முன்பே ஆரம்பமாகிவிட்டது.

அதிலும் இதற்கு பெண்கள் ஒன்றும் விதிவிலக்கானவர்கள் அல்ல. ஆம், அது தான் பெண் அடிமைத்தனம்.

இது அனைவருக்கும் தெரிந்த கதை தான். ஆரம்பக் காலங்களில் பெண்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டன.

வீட்டை விட்டு வெளியில் செல்வதென்றாலே அதற்கு இன்னொருவரின் அனுமதி தேவைப்பட்டது. காரணம் படி தாண்டினால் படிப்பாளி ஆகிவிடுவாளோ என்ற அச்சம்.

அதனைத் தொடர்ந்து வந்த வெளிநாட்டவர் நாட்டுக்கு வந்து நம்மவர்களை தொழிலாளர்கள் எனும் போர்வையில் கொத்தடிமைகளாக நடத்தினர்.

கல்வி பறிக்கப்பட்டது... பேச்சுரிமை நிறுத்தப்பட்டது... மாடுகளாய் வேலை செய்தனர் மனிதர்கள்.

இதற்கு ஒரு தீர்வு கிடைக்காதா என்று ஏங்கிய மக்களுக்கு கிடைத்தது பெயரளவில் சுதந்திரம்.

இது ஒருபுறம் என்றால், வெள்ளைத் தோலுடன் இருப்பவர்கள் உயர் வர்க்கத்தினர் என்றும் கறுத்த தோல் உடையவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் நிற அடிப்படையிலான ஒரு வகை அடிமைத்தனம் அந்தக் காலத்திலிருந்து தற்போது வரையில் பெரும் பிரச்சினையாக உள்ளது.

அடுத்தது ஜாதி. ஜாதி ரீதியிலான அடிமைத்தனம் என்பது கொடுமையின் உச்சமாக பார்க்கப்படுகிறது. பாடசாலைகளில், வழிபாட்டுத் தளங்களில், வீதிகளில் என ஜாதி ரீதியிலான அடக்குமுறைகள் மற்றும் அடிமைத்தனம் தற்போது வரையில் இலை மறை காயாய் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கிறது.

உயர் குலத்தோர் கோயிலுக்கு உள்ளேயும் குலத்தில் சற்று குறைந்தவர் கோயிலுக்கு வெளியிலும் நின்று இறைவனை தரிசிக்க வேண்டும்.

அதேபோல் தாழ்ந்த குலத்தோர் காலில் செருப்பு அணியக்கூட ஒரு கால கட்டத்தில் தடை விதிக்கப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.


இவ்வாறு ஜாதி அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அடிமைத்தனங்கள் மிகவும் மோசமானவையாக உள்ளன.

தொழில் புரியும் இடங்களில் கூட மேலதிகாரிகளால் சில வேளைகளில் அடிமட்ட தொழிலாளர்கள் மீது ஒரு வித அடிமைத்தனப் போக்கு பின்பற்றப்படுகிறது.

அடிமைத்தனமா? அதெல்லாம் எப்போதோ மலையேறிவிட்டதே என ஒரு சிலர் கூறக் கூடும்.

ஆனால், அது தான் இல்லை. அண்மையில் இந்தியாவில் பெண் ஒருவர் ஐந்து பேரை பணம் கொடுத்து வாங்கி கொத்தடிமைகளாக நடத்தி வேலை வாங்கியுள்ளார். அதில் இரண்டு சிறுவர்களும் உள்ளடங்குவர். சம்பவம் வெளிச்சத்துக்கு வர, குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறான சம்பவங்கள் தற்பொழுதும் நடந்து வருகின்றமை கவலைக்குரியது.




## படி தாண்டினால் பெண் படிப்பாளி ஆகிவிடுவாளோ என்ற அச்சம் !

### வரலாறு

அடிமை முறை எப்போது தோன்றியது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, பழமையான ஆவணமான மெசபத்தேமியாவில் (கி.மு 1860) அடிமைமுறை பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், முறைப்படுத்தப்பட்ட ஒரு அமைப்பாகவும் இருந்தது என்று கூறப்படுகிறது.

ஆனால், இந்த அடிமை முறை என்பது காட்டுவாசி மக்களிடையே காணப்படவில்லை. ஏனென்றால் இம்முறை சமுதாய அடுக்கமைவுகளில்தான் வளர்ச்சி அடைந்தது.




கி.மு 3500 ஆண்டு பழமையான மெசபத்தேமியாவின் சுமேரிய நாகரீகம் தான் முதன்முதலில் அடிமை முறை பற்றிக் கூறுகிறது.

இந்நாகரீகம் தான் மற்ற நாகரீகங்களுக்கெல்லாம் முந்தையது. பைசாந்தியப் பேரரசுக்கும் உதுமானியத் துருக்கியருக்கும் இடையே நடைபெற்ற போரின்போது நிறைய கிறிஸ்தவர்கள் அடிமைகளாக்கப்பட்டனர்.

ஐரோப்பாவில் அடிமை முறை என்பது இருண்ட காலம் தொடங்கி இடைக்காலம் வரை பொதுமக்களிடையே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாக இருந்தது. குறிப்பாக, கி.பி.1600க்கு பிறகு அத்திலாந்திக்கின் அடிமை வணிகத்தில் டச்சு, பிரெஞ்சு, எசுப்பானிய, போர்த்துக்கீஸ, ஆங்கிலேய, அரேபிய மக்கள் மற்றும் மேற்கு ஆபிரிக்கப் பேரரசுகள் முக்கிய பங்கினை வகித்தார்கள்.

19ஆம் நுற்றாண்டின் தொடக்கத்தில் உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் தங்கள் விருப்பத்திற்கு மாறாக பண்ணையடிமைகளாக்கப்பட்டனர். டென்மார்க், நோர்வே நாடுகள்தான் முதன்முதலாக கி.பி 1802இல் அடிமை வணிகத்தைத் தடை செய்த ஐரோப்பிய நாடுகளாகும்.

இவ்வாறு அடிமை முறைக்கென்று ஒரு வரலாறும் உண்டு. என்னதான் அடிமைத் தனம் குறைந்து விட்டதாக நாம் நினைத்துக் கொண்டிருந்தாலும் ஏதோ ஒரு மூலையில் யாரோ ஒருவருக்கு இக் கொடுமை நடப்பது வேதனையளிக்கிறது.

தனக்கு நடப்பது அடிமை முறை என்று தெரியாமலே ஒரு சிலர் அதற்குள் சிக்கித் தவிக்கின்றனர்.

ஒருவரின் உரிமையை பறிக்கும் விதத்தில் அவரது விருப்பமின்றி திணிக்கப்படும் ஒவ்வொரு செயற்பாடும் அடிமைத்தனத்தின் அர்த்தம்.

இந்த அடிமை முறை ஒழிப்பு தினத்திலாவது விலங்குகளை உடைத்து சிறகுகளை விரித்து சுதந்திர காற்றை சுவாசிப்போம்....



# சோளப் பயிரில் படைப்புழு தாக்கம்




(எம்.ரீ.ஆரிப்)

மழையுடன் கூடிய காலநிலையுடன் சோளப் செய்கையில் படைப்புழு தாக்கம் தலை தூக்கியுள்ளது. இந்த படைப்புழு தாக்கத்தினை முதிர்ச்சியடையுமுன் உங்கள் பகுதியில் உள்ள விவசாய ஆலோசகரிடம் தெரிவித்து இதனை கட்டுப்படுத்த தேவையான அறிவுரைகளை பெற்றுக்கொள்ளுமாறு வடமத்திய மாகாண விவசாய பணிப்பாளர் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரஜரட்ட பகுதியில் சீரற்ற கால நிலை நிலவுவதால் படைப்புகழுவின் தாக்கம் தென்படுவதாகவும் அதன் தாக்கம் அதிகரிக்ககூடிய அபாயம் உள்ளது எனவும் வடமத்திய மாகாண விவசாய பணிப்பாளர் கலாநிதி புத்திக அமேசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் அலயாபத்துவ பகுதியில் இந்த படைப்புழு காணக்கூடியதாக உள்ளதாகவும் இந்த தாக்கம் அதிகரிப்பதற்கு முன்னர் தங்கள பகுதியில் உள்ள விவசாய ஆலோசகரிடம் தெரிவித்து இந்த தாக்கத்தினை பராமரிக்க ஆலோசனை பெற்றுக் கொள்ளுமாறு பணிப்பாளர் விவசாயிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கைதானவருக்கு 12ஆம் திகதிவரை விளக்கமறியல்

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

கல்கிரியாகம இங்குருவெவ பகுதியில் நீண்ட தந்தங்களைக் கொண்ட யானை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவருக்கு எதிர்வரும் (12) ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கெக்கிராவ பதில் நீதிவான் கெமுனு திஸாநாயக்க (29) உத்தரவிட்டுள்ளார்.

கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் காப்புறுதி நிறுவனத்தின் பிரதான முகாமையாளர் ஆவார்.

உயிரிழந்த காட்டு யானையின் பிரேத பரிசோதனையினை கால்நடை வைத்தியர் சந்தன ரணசிங்க மேற்கொண்டிருந்தார்.

40 அல்லது 50 வயது மதிக்கத்தக்க 4 அடி 2 அங்குலம் உயரமுடைய நீண்ட தந்தங்களைக் கொண்ட யானையே உயிரிழந்துள்ளது.

## அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர் சங்க புதிய நிர்வாகிகள்

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்)

அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அநுராதபுரம் வைட் ஹவுஸ் உணவகத்தில் (30) நடைபெற்றது.

இதன்போது அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் 2025 புதிய வருடத்திற்கான அங்கத்தவர் தெரிவு நடைபெற்றது.

தலைவர் :- ஏ.ஆர் .மொஹமட் நிப்ராஸ் , செயலாளர் :- பேர்சி குறுநேறு , பொருளாளர் :-பிரபாத் சஞ்சய் ஜயசிங்க , இணைப்பாளர் :- வசந்த பண்டார களு ஆராச்சி, பிரதான அமைப்பாளர்:- ஏ.எச். தம்சீர் ஹமீட் ,உப தலைவர்:- எல். அநுர குமார , உப செயலாளர்:- தயாரத்ன எப்போகமுவ , கணக்கு பரிசோதகர் :- டப்ளியூ.பிரதீப் ரணதுங்க.

உறுப்பினர்களாக :- சந்திரதாச மல்லவ ஆராச்சி, ஏ.எச்.இபாம் ,சமந்த லீலாரத்ன , கிசாந்த சிந்தக்க பால சூரிய , கே.என். ஜீ.சரத்சந்ர ,எம்.ரீ.ஆரிப், இரந்தி வன்னி நாயக்க, சாமர விக்ரம ஆராச்சி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## கல்குடாவில் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைப்பு

கடந்த சில நாட்களாக இடம்பெற்ற சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேசங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்தன அந்த வகையில் கல்குடா பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்எல்ஏஎம் ஹிஸ்புல்லாஹ் வின் நிதி உதவி என் கீழ் வாழைச்சேனை அன்னூர் தேசிய பாடசாலையின் 2008 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்கத்தின் சதக்கா அறக்கட்டளை ஊடாக உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கான பணிகளில் வாழைச்சேனை அன்னூ ர் தேசிய பாடசாலையின் 2008 ஆம் ஆண்டு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் தங்களுடைய பங்களிப்பினை வழங்கி இருந்தார்கள் இதற்கு முன் இது போன்ற பல சமூக சேவை திட்டங்களை இந்த பழைய மாணவர் சங்கத்தினர் மேற்கொண்டு இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எம்.பிக்களை தண்டிக்கும் வகையில் சட்டம் வேண்டும் உதுமாலெப்பை எம்.பி. சபாநாயகரிடம் கோரிக்கை

நமது நாட்டுக்கும் நாடாளுமன்றத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுத்தி கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிகளை நீக்கக் கூடிய வகையில் நாடாளுமன்றத்தில் புதிய சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டும்" என அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். உதுமாலெப்பை சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பத்தாவது நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட திசை முகப்படுத்தல் செயலமர்வு நாடாளுமன்றத்தில் சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வல தலைமையில் நடைபெற்றபோது உரையாற்றிய அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

மக்களின் ஆணையினைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் நமது நாட்டிற்கும், நாடாளுமன்றத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுத்தி கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். இப்படியான நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குவதற்கான புதிய சட்டமூலத்தினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து தீர்மானத்தை மேற்கொள்ள சபாநாயகர் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தில் சட்டமூலம் கொண்டு வந்து கடத்தலில் ஈடுபடும் நாடாளுமன்ற உறுப்பினர்களை பதவிலிருந்து நீக்க முடியாத நிலைமை ஏற்படுமாயின், ஜனாதிபதியின் விசேட அதிகாரத்தை பயன்படுத்தி கடத்தலில் ஈடுபடும்



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதியின் விசேட ஜனாதிபதி குழு ஒன்றை நியமிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி

எம்.யூ.எம்.சனூன்

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளை புத்தளம் பெரிய பள்ளி மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து மத நல்லிணக்கத்தை முன்னிட்டு புத்தளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெண்களுக்கு பொருட்கள், சிறுவர்களுக்கான அத்தியாவசிய பொருட்கள் வீட்டை சுத்தம் செய்யும் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்ய திரவப்பொருள்கள் போன்றவை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

புத்தளம் கொழும்பு வீதியில் அமைந்துள்ள பௌத்த மத்திய நிலையம், வெளிச் சுற்று பாதையில் அமைந்துள்ள விசுத் தாராம விகாரை, தில்லையடியில் இந்து கோயில், மணல் குன்று பொம்மக்கன் ஆலயம், செம்மாந்தலுவ ஆலயம் மற்றும் மணல்தீவு கிறிஸ்தவ ஆலயம் போன்ற இடங்களுக்கு சென்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேக் ஜிப்னாஸ் அல்மிஸ்பாஹிவினால் ஒப்ப டைக்கப்பட்டன.

இது தவிர புத்தளம் நகரின் 22 மஸ்ஜித் நிர்வாகிகளிடமும் இவ்வாறான உதவி பொருட்கள் ஒப்படைக்கப்பட்டன.இதற்காக உதவி செய்த அனைவ ருக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் சமூக சேவை உப குழுவின் தவிசாளர் அஷ்ஷெ ய்க் சனூஸ் அஷ்ரபி நன்றி தெரிவித்துள்ளார்.




## இராணுவ சிப்பாய்கள் மூவர் கைது

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

அனுமதிப்பத்திரமின்றி அங்கிகரிக்கப்படாத தனியார் மரக் கொட்டகை ஒன்றை நடாத்திச் சென்ற இராணுவ சிப்பாய்கள் மூவரை மரக் குவியல் மற்றும் உபகரணங்களுடன் கைது செய்துள்ளதாக பிரியங்கரகம பொலிசார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கல்நேவ வுல்நேவ பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் எப்பாவல ஹல்மில்லேவ , பழுகஸ்வெவ விஜிதபுர மற்றும் கல்கமுவ பாழுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு சாதாரண வீரர்களும் கோப்ரல் ஒருவருமாவர்.

கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய பிரியங்கரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் லக்சிறி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் எப்பாவல இஹல ஹல்மில்லேவ அதிராணிகம பகுதியில் குறித்த சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர். இதன் போது மூன்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் தச்சு கொட்டகையில் இருந்து முடிக்கப்பட்ட இரண்டு செட் நாற்காலிகள்,

## பொத்துவில் பிரதேசத்திற்கு கள விஜயம் செய்த பிரதியமைச்சர் வசந்த

(றிஸ்வான் சாலிஹூ)

கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதியமைச்சரும், அம்பாரை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான வசந்த பியதிஸ்ஸ வெள்ளிக்கிழமை (29) பொத்துவில் பிரதேசத்திற்கு கள விஜயமொற்றை மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின் போது, ஹெட ஓயா ஆறு மற்றும் அதை அண்மித்த விவசாய காணிகள், துவ்வே ஆற்றின் அணைக்கட்டினையும் அதை அண்மித்த விவசாயக்காணிகளையும் பார்வையிட்டதோடு களப்புக்கட்டு பிரதேசத்தையும் பார்வையிட்டார்.

அத்தோடு ஹெட ஓயா அணைக்கட்டு திருத்தவேலைக்கான மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை உடனடியாக சமர்ப்பிக்குமாறு பொத்துவில் நீர்ப்பாசன பொறியியலாளரைக் கேட்டுக் கொண்ட அவர், வெள்ளத்தினால் சேதமடைந்த பகுதிகளிலுள்ள வீதிகளை திருத்தியமைப்ப தற்கான மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை உடனடியாக சமர்ப்பிக்குமாறு பொத்துவில் பிரதேச சபை செயலாளருக்கு பணிப்புரை அவர் விடுத்தார்.

மேலும், களப்புக்கட்டு பகுதியில் நன்னீர் மீன்பிடி ஓடங்களை நிறுத்தி வைப்பதற்கான இறங்குதுறை ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மீன்பிடித்துறை பிரதியமைச்சரின் வருகையின் போது ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பொத்துவில் செயற்பாட்டாளர் ஆதம் சலீம், பல்வேறு அரச நிறுவனங்களின் அதிகாரிகள், மீனவ சங்க பிரதிநிதிகள் மற்றும் பிரதேசவாசிகளும் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டனர்.





கனுஷியா புஷ்பகுமார்

# 2025 இல் அநுர அரசாங்கம் சந்திக்கப்போகும் சவால்கள்!

## ஜனவரி முதல் புதிய வரிக் கொள்கைகளை அமுல்படுத்த அரசு திட்டம்...?

2025ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் , சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பார்ப்புக்களை சமநிலைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் கடுமையான நிதி சிக்கல்களையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இது ஒன்றும் எளிதான காரியம் அல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கும், பொது மக்களின் எதிர்பார்ப்புகளை பூரணப்படுத்துவதற்கும் இடையே உள்ள கடுமையான சவால்கள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு தலை இடியாக இருக்கப் போகிறது.

பல எதிர்க்கட்சிகளும், பழைய அரசியல் தலைமைகளும் தேசிய மக்கள் சக்தியின் இந்த சவால்களை எவ்வாறு எதிர்கொள்ள போகின்றது என்பது தொடர்பில் உற்று நோக்கி வருகின்றன.

2025 ஆம் ஆண்டளவில் அரசாங்க வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 வீதமாக ஆக உயர்த்த இலங்கையின் திறனை அடிப்படையாகக் கொண்டு தனது அடுத்த கடன் தவணையை வெளியிட சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் அதிருப்தியை அதிகரிக்காமல் இதை அடைவது அரசாங்கத்திற்கு கணிசமான அழுத்தத்தை கொடுக்கும் விடயமாகப் பார்க்கப்படுகிறது.

குறிப்பாக 2025 ஆம் ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.2 வீதத்தால் மாத்திரமே பொதுச் செலவினங்களை அதிகரிக்க சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்துள்ளதால், மக்கள் எதிர்பார்க்கும் வாழ்க்கையை அடைய முடியாமல் போவது தவிர்க்க முடியாதது.

மேலும், இந்த நிதி இலக்குகளை அடைய, சொத்து வரி, தனிநபர் வரி, மற்றும் மதிப்பிடப்பட்ட வாடகை வருமானச் சட்டம் உள்ளிட்ட பல சர்ச்சைக்குரிய கொள்கைகளை, 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது.

இது குறிப்பாக சொத்து உரிமையாளர்கள் மற்றும் நடுத்தர வருமானம் உள்ள குடும்பங்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கும். எனவே, மக்கள் விரும்பாத கொள்கைகளுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்த வாய்ப்பு உள்ளது. 2024ஆம் ஆண்டில் வரி அதிகரிப்பு குறித்து அரசாங்கம் ஏற்கனவே பரவலான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. தற்போது நடுத்தர குடும்பங்கள் அதிகரித்த செலவுகளின் சுமையை உணர்ந்துள்ளன.

வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதால், மட்டுப்படுத்தப்பட்ட பொதுச் செலவுகள் நிவாரணம் அல்லது மானியங்களை வழங்குவதற்கான திறனை மட்டுப்படுத்தியதால், சமூக நலனுக்கான அரசாங்கத்தின் ஆதரவு போதுமானதா என்றும் பல தரப்பினர் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

மேலும், அரசு நம்பகத்தன்மை நெருக்கடியையும் சந்தித்து வருகிறது. அதாவது, அரசியல் மேடைகளில் அளிக்கப்படும் இலட்சிய வாக்குறுதிகளை இந்தச் சூழ்நிலையில் இப்போது நிறைவேற்ற முடியாது என்ற எண்ணத்தில் வாக்காளர்கள் ஆழ்ந்த ஏமாற்றம் அடைவார்கள். சவால்கள் இருந்த போதிலும், சீர்திருத்தத்திற் கான வாய்ப்புகள் பல உள்ளன.

திறமையி ன்மை களை நிவர்த்தி செய்வதன் மூலமும், வரி தளத்தை விரிவுபடுத்துவதன் மூலமும், மக்கள் மீது சுமையில்லாமல் நிலையான வருவாய் வளர்ச்சியை அரசாங்கங்கள் இலக்காகக் கொள்ள முடியும்.

வரி வசூலை முறைப்படுத்தவும், வரி ஏய்ப்பைத் தடுக்கவும், வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கவும் டிஜிட்டல் முறைகளை அறிமுகப்படுத்துவது வருவாய் இடைவெளியைக் குறைக்க உதவும். இதேவேளை, சுற்றுலா, விவசாயம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் கொள்கைகள் மொத்த உள்நாட்டு உற்பத்தி விரிவாக்கத்தைத் தூண்டும்.

எவ்வாறாயினும், இந்த முயற்சிகளுக்கு அதிக காலம் எடுக்கும், மேலும் சர்வதேச நாணய நிதியத்தால் நிர்ணயிக்கப்பட்ட தற்போதைய காலக்கெடு படிப்படியாக செயல்படுத்தப்பட வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிதி ஒழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் மற்றும் வெளிப்படையான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும், இந்த நடவடிக்கைகளின் அவசியத்தை பொதுமக்களுக்கு தெளிவாக தெரிவிக்க வேண்டும்.

வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், உற்பத்தியை மேம்படுத்தவும் தனியார் துறையுடன் ஒத்துழைப்பதன் மூலமும் பொருளாதார பின்னடைவை உருவாக்க முடியும். இவ்விடயமானது, சரியான திட்டமிடல் இல்லாமல் ஆடம்பர வார்த்தைகள் மற்றும் அறிக்கைகள் மூலம் நாடுகளை கட்டியெழுப்ப முடியாது என்பதை உலகிற்கும் வலியுறுத்து கிறது.

சர்வதேச நாணய நிதியத்தால் நிர்ணயிக்கப்பட்ட 2025ஆம் ஆண் டுக்கான இலக்குகள் கடினமானவை என்றாலும்,நீண்ட கால ஸ்திரத்தன்மைக் காக நாட்டின் பொருளாதார கட்டமைப்பை மறுவடிவமைப்பதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றன.

இருப்பினும், இதற்கு நிதி விவேகம் மட்டுமல்ல, அரசியல் அறிவும், பொது நம்பிக்கையும் முக்கியமாகும்.

எதிர்வரும் ஆண்டுகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவசரமாக விதைக்க வேண்டிய அடிப்படை விதைகள் இவையாக பார்க்கப்படுகின்றன.



**நிபந்தனைகளை சரி செய்வதும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும் பாரிய சவாலாகும்..!**



---



தாமோதரம் சுதாகரன்

# இந்தியாவில் கரையை கடந்த “பெங்கால்”புயல்

**Exclusive Report**

கடந்த 23ஆம் திகதி வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு புயலாக வலுப்பெற்றது. இலங்கையின் கிழக்குப் பகுதியில் உருவான இந்த புயலானது இந்தியாவில் சனிக்கிழமையன்று கரையைக் கடந்தது. குறித்த புயலுக்கு “பெங்கால்“ என பெயர் சூட்டப்பட்டது. இந்த பெங்கால்“ புயல் நேற்று முன்தினம் இரவு 10.30 மணி முதல் 11.30 மணிக்குள் முழுமையாக கரையக் கடந்த விட்டதாக இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவித்திருந்தது.

அதிக பாதிப்புக்களை ஏற்படுத்திய இந்தப் புயலானது இந்தியவின் புதுச்சேரிக்கு கிழக்கு-வடகிழக்கே 40 கி.மீ. தூரத்தில் நிலை கொண்டிருந்ததைத் தொடர்ந்து முன் நோக்கி நகர்ந்து கரையைக் கடக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்த நிலையில் மாமல்லபுரத்தில் கடல் சீற்றத்துடன் காணப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்திருந்தது.

அத்துடன் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத் தூர், தருமபுரி, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மற்றும் கட லூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கன மற்றும் அதிகன மழை இருக்கும் எனவும் குறிப்பிட்டிருந்தது.

மேலும், சென்னை, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, திருச்சி, அரியலூர், பெரம்ப லூர், மயிலாடுதுறை, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் மிதமான மழை பொழிய வாய்ப்புள்ளதாகவும், அதோடு, ஈரோடு, கரூர் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழை பொழிய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் பெங்கால் புயல் காரணமாக பெய்த பெருமழையால் கட லூர் – புதுச்சேரி வீதியில் மழைநீர் ஆறுபோல் ஓடுவதால் அவ்வதிப்போக்குவரத்து நிறுத்தப்பட்டதுன் இந்தப் புயல் எதிரொலியாக சென்னை விமான நிலையத்தின் நேற்றுக் காலை (1.12.2024) 4 மணிவரை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது. மேலும் தொடர்ந்து மழை பெய்து வருவதால் சென்னையில் எழும்பூர், சுந்தரம் பாயின்ட், பழவந்தாங்கல், ˙கராஜபுரம், திருவொற்றியூர் அஜாக்ஸ் உள்பட 6 சுரங்கப் பாதைகள் மூடப்பட்டன.

இதேவேளை புயல் ஏற்பாடுகள் குறித்துப் கூறிய முதலமைச்சர் ஸ்டாலின், “தொடர்ந்து 2-3 நாட்களாக மழை பெய்யும் என்று எச்சரிக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடு அரசு அது குறித்து தொடர்ந்து ஆய்வு நடத்தி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது,” என தெரிவித்திருந்தார்.

சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களின் ஆட்சியர்களைத் தொடர்புகொண்டு நிவாரணப் பணிகள், முகாம்கள் பற்றித் தொடர்ந்து மேற்பார்வை செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையிலேயே வங்கக்கடலில் உருவான பெங்கால் புயல் புதுச்சேரி அருகே நேற்று முன்தினம் சனிக்கிழமை கரையை கடந்தது. புயல் காரணமாக சூறாவளி காற்றுடன் புதுச்சேரியில் வரலாறு காணாத வகையில் இடைவிடாது பெருமழை கொட்டி தீர்த்தது. இதனால் புதுச்சேரி நகரப்பகுதி மட்டுமின்றி கிராமப் பகுதிகளும் வெள்ளக்காடானது. பல இடங்களில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்தது.

புயல் கரையை கடந்த போது 70-80 கி.மீ வேகத்திலும், அவ்வப்போது 90 கிமீ வேகத்திலும் காற்று வீசியது. புதுச்சேரியில் 46 செமீ மழை பதிவான நிலையில், தற்போது தமிழகத்தின் பல பகுதிகளை நீர் சூழ்ந்துள்ளது.

“மாவட்ட நிர்வாகம் புயல் தாக்கத்தை எதிர்கொள்ள தேவையான நடவடிக்கையை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளது. இதேவேளை பாதிக்கப்பட்ட மக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக சுமார் 4000 அரசு ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்““ என புதுச்சேரி மாவட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் பொதுமக்கள் வெளியே வர முடியாமல் வீடுகளுக்குள் முடங்கினர். ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்தன. பல்வேறு பகுதிகளில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. மின்கம்பங்கள் உடைந்து சரிந்தன. குறிப்பாக கனகன் ஏரிக்கரை அருகே உள்ள மருது நகர் உள்ளிட்ட பகுதிகளில் மழை நீர் புகுந்ததால், பொதுமக்கள் மேல் தளத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

> “புயலை எதிர்கொள்ள அரசும், மாநகராட்சிப் பணியாளர்களும் தயார்நிலையில் உள்ளனர். நாடாளுமன்ற, சட்டமன்ற, மாமன்ற உறுப்பினர்களை பொதுமக்களுக்குத் துணையாகக் களத்தில் இருந்து பணியாற்றிட உத்தரவிட்டுள்ளேன். அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பொதுமக்கள் பாதுகாப்புடன் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.”
>
> மு.க ஸ்டாலின்
> தமிழ்நாடு முதலமைச்சர்



கோவிந்தசாலை குபேர் நகர், அந்தோணியார் வீதி உள்ளிட்ட உப்பனாறு வாய்க்காலை ஒட்டிய பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான வீடுகளுக்குள் மழைநீர் புகுந்து மக்கள் தண்ணீரில் தத்தளித்தனர். இதன் காரணமாக படையினர் அப்பகுதிக்கும் விரைந்து பொதுமக்களை படகு மூலம் மீட்டனர்.

தொடர் மழையினால் லாஸ்பேட்டை தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல் லூரி, சீகல்ஸ் கன்வென்ஷன் சென்டர் போன்ற பகுதிகளில் மதில்சுவர் இடிந்து விழுந்தது. மேலும் லாஸ்பேட்டை உயர் மற்றும் தொழில்நுட்ப கல்வி அலுவலகம், நாவலர் அரசு பாடசாலை லாஸ்பேட்டை புறக்காவல் நிலையம், பாரதிதாசன் மகளிர் கல்லூரி அருகே இருந்த மரங்கள் வேரோடு சாய்ந்தன.

கிழக்குகடற்கரை வீதி கொக்கு பார்க் சிக்னல் அருகே புதிதாக அமைக்கப்பட்ட போக்குவரத்து சமிக்ஞைகள் வீதியில் விழுந்தது நொறுங்கின. இதேபோல் கிழக்கு கடற்கரை சாலையில் மாநில அவசர கட்டுபாட்டு அறை மழைநீரால் நிரம்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்றிரவு வீசிய சூறைக்காற்றால் 2க்கும் மேற்பட்ட குடிசை வீடுகள் இடிந்து விழுந்தன. மாநிலம் முழுவதும் மழை வெள்ளத்தில் சிக்கிய மக்களை காப்பாற்றி நிவாரண முகாம்களில் தங்க வைத்து உணவு வழங்கும் பணி, சாலையில் விழுந்த 100க்கும் மேற்பட்ட மரங்கள் மற்றும் மரக்கிளை வெட்டி அப்புறப்படுத்தும் பணி, அறுந்து விழுந்த மின் கம்பிகள், சேதமடைந்த மின் கம்பங்களை சீரமைக்கும் பணியிலும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 5 ஆயிரம் அரசு ஊழியர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை இடர் முகாமைத்துவ மீட்புப்படையினர் துணை இராணுவத்தினர், தன்னார்வலர்களும் மீட்புப் பணியில் இறங்கியுள்ளனர். கடலூர் – புதுச்சேரி வீதியில் கிருமாம்பாக்கம் – பிள்ளையார்குப்பத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அருகே மழைநீருடன் வீதியெங்கும் வாய்க்கால் கழிவுநீர் கலந்து இடுப்பளவு நீர் சூழ்ந்துள்ளதால் அச்சாலையில் போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது.

கிருமாம்பாக்கம் மற்றும் கன்னியக்கோயில் பகுதிகளில் வீதியின் தடுப்புகள் அமைத்து போக்குவரத்து திருப்பி விடப்பட்டுள்ளது. இதனால் வேலை நிமித்தம், மருத்துவம் போன்ற பல்வேறு தேவைகளுக்காக இரு பகுதிகளுக்கும் செல்ல முடியாமல் பொதுமக்கள் கடும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர்.

இதேபோல் பல இடங்களில் வீதியில் மழைநீர் சூழ்ந்துள்ளதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. பாகூர், கரையாம்புத்தூர் போன்ற இடங்களிலும் விவசாய நிலங்களில் மழைநீர் சூழ்ந்துள்ளதால் பயிர்செய்கை நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

### 30 ஆண்டுகளில் அதிகமான மழை பதிவு

புதுச்சேரி வரலாற்றிலேயே 1995-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரையிலான கடந்த 30 ஆண்டுகளில் அதிகபட்சமாக நேற்று காலை 8.30 மணி முதல் நேற்றுக் காலை 8.30 மணி வரையிலான 24 மணிநேரத்தில் 48.4 செ.மீ., மழை கொட்டி தீர்த்துள்ளது.

இதற்கு முன்பு அதிகபட்சமாக கடந்த 2004ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் திகதி ஒரே நாளில் 21 செ.மீ., மழை பெய்தது அதிகபட்சமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிக்க கோரிக்கை

## அடைக்கலநாதன் எம்.பி ஜனாதிபதிக்கு கோரிக்கை கடிதம்



மன்னார் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். காணிகள் தொடர்ந்தும் கடற்படையினரின் கீழ் காணப்படுவதால் தமிழ் மக்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்தை பேண முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மன்னார் மாவட்டத்தில் உள்ள முள்ளிக்குளம், தலைமன்னார் பியர் பள்ளிமுனை, வங்காலை ஆகிய கிராமங்களில் கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் காணிகள் இன்னும் அவர்களிடம் இருந்து மக்களுக்கு கையளிக்க முடியாத நிலையில் காணப்படுவதாகவும், அந்த காணிகளின் உண்மையான உரிமையாளர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அத்தோடு முள்ளிக்குளத்திலுள்ள மக்களின் விளை நிலங்கள் மற்றும் குடியிருப்புக் காணிகள், தலைமன்னார் பியரில் உள்ள சதசகாய அன்னையின் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு சொந்தமான காணிகள், வங்காலை நானாட்டான் வீதியின் ஓரத்தில் உள்ள தனிநபர்களின் காணிகள் மற்றும் பள்ளி முனையிலுள்ள குடியிருப்புக் காணிகள் ஆகியவை விடுவிக்கப்படாமல் உள்ளன.

வடமேற்கு கடற்படைத் தலைமையகம் இப்பகுதியில் நிறுவப்பட்ட பின்னரும் கடற்படையினர் அந்தக் காணிகளை இன்னமும் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

தலைமன்னாரிலுள்ள நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த "மடு மாதா" தேவாலயத்திற்குச் சொந்தமான பெருமளவிலான காணிகள் இன்னமும் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. காணிகளை விடுவித்து மக்கள் தமது காணிகளில் சுதந்திரமாக வாழ சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

## வெள்ள அனர்த்தம்

### யாழ். அரச அதிபர்-சிறீதரன் எம்.பி. கலந்துரையாடல்



யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபனை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் (30) சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் தற்போதைய வெள்ள அனர்த்த நிலைமைகள் மற்றும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

## இந்திய மீனவர்களின் அத்துமீறலை நாம் நிறுத்துவோம்

### கடற்றொழில் அமைச்சர் உறுதிமொழி



இந்திய மீனவர்களது வருகையை கடந்த ஆட்சி காலத்தை போலல்லாது கடற்படையினர் ஊடாக தடுத்த நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரம் மீனவர்களுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை – கொட்டடி பகுதி மீனவர்களது அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் மாலை கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரம் அப்பகுதி மீனவர்களை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது இந்திய மீனவர்களது எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கை தொடர்ந்து வருகின்றமை காரணமாக வடக்கு மீனவர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனவும் அதனை தடுத்து நிறுத்த இலங்கை கடற்படையினர் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அத்துடன், சுருக்கு வலை உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட தொழில்களையும் முற்றாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். மீனவர்களது கோரிக்கையினை செவிமடுத்த கடற்றொழில் அமைச்சர் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

தொடர்ந்து சீரற்ற காலநிலை காரணமாக அப்பகுதியில் மழை வெள்ளத்தில் பாதிப்பிற்குள்ளான வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

## தனியான கமக்கார அமைப்புக்கான கோரிக்கை மனு முன்வைப்பு

(ஜதுர்சிகா)

கிளிநொச்சி கண்டவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள புலிங்கதேவன் முறிப்பு கமக்கார அமைப்புக்குட்பட்ட உடுப்பா ஏற்றுக் கண்டல் விவசாயிகள் தங்களை தனியான கமக்கார அமைப்பாக பிரிப்பதற்கான கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

கிளிநொச்சி பரந்தன் மற்றும் கண்டாவளை கமநல சேவை நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் புதிய கமக்கார அமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.அந்த வகையிலே கண்டாளை பிரதேசத்திற்கு உட்பட்ட ஊரியான் மேற்கு மற்றும் வெளிக்கண்டல் ஆகிய கமக்கார அமைப்புகள் தனித்தனி அமைப்புக்களாக பதிவு செய்யப்பட்டு விவசாயிகளின் நலன்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த நிலையிலே புலிங்கதேவன் முறிப்பு கமக்கார அமைப்பு பிரிவுக்குட்பட்ட உடுப்பாற்றுக்கண்டல் விவசாயிகள் தங்களை தனியான கமக்கார அமைப்பாக செயல்படுவதற்குஉரிய கோரிக்கை விடுத்துள்ளனர் இது தொடர்பிலான எழுத்து மூல கோரிக்கைகள் குறித்த பிரதேச விவசாயிகள் கையொப்பமிட்ட கடிதம் ஆகியவற்றை கமநல அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட அரச அதிபர் நீர்ப்பாசனத் திணைக்களம் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு சமர்ப்பித்துள்ளனர். அதாவது அதிகளவு நிலப்பரப்புகளையும் விவசாயிகளையும் கொண்ட புலிங்கதேவன் முறிப்பு கமக்கார அமைப்பில் கடந்த சிறுபோக செய்கை மற்றும் 2021 ஆம் 2022 ஆம் ஆண்டு சிறுபோகம் மற்றும் பெரும் போகத்திலும் பல்வேறு முறை கேடுகள் இடம்பெற்றுள்ளதுடன் அதிகளவான விவசாயிகளும் தனிப்பட்ட ரீதியாக பாதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் யானை தாக்கி கடற்படை அதிகாரி பலி

(கி.வசந்தன்)

வவுனியாவில் கடற்படை லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவர் காட்டு யானை தாக்குதலில் மரணமடைந்துள்ளதாக பூனாவ பொலிசார் தெரிவித்துள்ளனர். பணி நிமித்தமாக கொழும்புக்கு சென்று பஸ்ஸில் முகாமிற்கு திரும்பிய அதிகாரி வாகனத்தில் இருந்து இறங்கி முகாமிற்கு சென்று கொண்டிருந்த போது வெள்ளிக்கிழமை (29) யானை தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர். பூனாவ கடற்படை முகாமில் கடமையாற்றிய , நிட்டம்புவவில் வசிக்கும் கடற்படை வீரரே உயிரிழந்துள்ளார் யானை தாக்கியதில் பலத்த காயமடைந்த அவரை, கடற்படையினர் மற்றும் உள்ளூர் மக்களும் இணைந்து வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். பலத்த காயமடைந்த அதிகாரி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## செட்டிகுளத்தில் குடும்ப பெண் தீயில் எரிந்து மரணம்

(கி.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் குடும்ப பெண் ஒருவர் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து தன் உயிரை மாய்த்து கொண்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. இச் சம்பவம் வெள்ளிக்கிழமை (29) இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவத்தில் செட்டிகுளம், பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த 29 வயது இளம் குடும்ப பெண்ணே மரணமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, செட்டிகுளம், பெரியகுளம் பகுதியில் வசித்து வந்த இளம் குடும்ப பெண் ஒருவர் இரவு வீட்டில் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து எரிந்த நிலையில் அயலவர்களால் மீட்கப்பட்டு செட்டிகுளம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

## தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படவேண்டும்

### அருண் தம்பிமுத்து

(வெல்லாவெளி நிருபர்)

எமது கட்சிக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கின்ற குற்றச்சாட்டுகளை குற்ற புலனாய்வுத்துறை மற்றும் தேர்தல் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தலுக்கு முன்பாக இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய தேவை உள்ளது என தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சியின் தலைவர் அருண் மொழிவர்மன் தம்பி முத்து தெரிவித்துள்ளார். நேற்று (01) மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது எமது கட்சிக்குள் எழுந்துள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டியுள்ளது. இன்று நமது கட்சிக்கு எதிராக நீதிமன்றத்தில் பல வழக்குகள் உள்ளன.

கடந்த பல வருடங்களாக தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சிக்குள் இருந்து செயற்பட்டவர்கள் இன்று பல பிரிவுகளாக பிரிந்து செயற்பட்டு வருகின்றனர். தமது உரிப்புரிமை நிராகரிக்கப்பட்டதாக பல வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. தற்போதைய தலைவரான எனக்கு ஒரு பொறுப்பிருக்கின்றது, எமது கட்சிக்குள் இருக்கின்ற பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டி உள்ளது. நான் இதற்காக ஒரு குழுவை நியமித்திகின்றேன்.

எமது கட்சி ஒரு மக்கள் இயக்கமாக மீண்டும் வலுப்பெற வேண்டுமென்றால் கட்சியைச் சார்ந்த அனைவரும் ஒன்றிணைந்து வெளிப்படைத்தன்மையுடன் ஒரு புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதன் மூலம் தான் எமது கட்சியானது மக்களிடம் முன்சென்று ஒரு தேர்தலிலோ அல்லது அரசியலை முன்னெடுப்பதற்கோ முடியும் என்றார்.

## மருத்துவ நிபுணர் வினோதன் மன்னாருக்கு இடமாற்றம்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பிராந்திய சகாதார சேவைகள் பணிப்பாளராக மீண்டும் விஷேட வைத்திய கலாநிதி தர்மராஜன் வினோதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்று (02)முதல் தனது பதவியை பொறுப்பேற்கிறார்.

2019 டிசம்பர் 26ஆந் திகதியிலிருந்து 2024 ஏப்பிரல் 16ஆந் திகதி வரை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய பின் கிளிநொச்சிக்கு மாற்றலாகி சென்றிருந்தார்.

இந்த நிலையிலே இவர் மீண்டும் மன்னாருக்கு மாற்றலாகி வருகின்றார். கொரோனா காலத்தில் நாடு பூராகவும் கொரோனா பாதிப்புக்கள் இடம்பெற்றபோதும் மன்னாரிலிருந்து மன்னார் மக்களை மீட்டெடுப்பதில் தீவிரமாக சரியான திட்டமிடலுடன் செயற்பட்டமையால் அந்நேரம் உயிர் சேதமின்றி மக்களை காப்பாற்றியமையால் இவர் பலராலும் பாராட்டு பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மைகாலமாக மன்னார் பொது வைத்தியசாலைக்கும் பொது மக்களுக்கும் இடையில் நிலவி வரும் இடைவெளியை இவர் நீக்கி நல்லதொரு நிலைமையை உருவாக்குவார் என இங்கு பலராலும் எதிர்பாக்கப்படுகின்றது.







பேசாலை பங்கு புனித வெற்றி அன்னையின் ஆலய வருடாந்த விழாவின் நவநாளில் முதல் நாள் "விண்ணகத்தின் திறவுகோல் செபம்" என்னும் மையப் பொருளில் மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி றொக்சன் குரூஸ் அடிகளார் தலைமையில் வெள்ளிக்கிழமை (29) நடைபெற்றது.

(படங்கள் : வாஸ் கூஞ்ஞ)

## அம்பாறை மாவட்டத்தில்

# நீர் வழங்கும் பிரதான குழாய்கள் உடைப்பு



(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக கல்முனை கரையோர பிரதேசங்களுக்கு நீர் வழங்கும் பிரதான குழாய்கள் சேதமடைந்தமை காரணமாக சீரான நீர்வழங்கலில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கரையோர பிராந்திய காரியாலயம் அறிவித்துள்ளது. தற்போது சேதமடைந்த பாரிய நீர்க்குழாய்களின் திருத்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் பகுதிகளுக்கான நீர் விநியோகம் அடிக்கடி தடைப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக திருத்த வேலைக்கான உபகரணங்கள் மற்றும் தொழிலாளர்களை கொண்டு வருவதற்கான வாகனப் பாதை தற்போது செப்பனிடப்பட்டுவருகிறது.திருத்த வேலைகளுக்கு ஆகக்கூடியது ஒரு வார காலம் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாறையிலிருந்து நிந்தவூர் பிரதான நீர்த்தாங்கிக்கு நீரை எடுத்து வருகின்ற பாரிய குழாய் சேதமடைந்திருப்பதன் காரணமாக கடந்த நான்கு நாட்களாக கரையோரத்தில் குறிப்பாக நிந்தவூர், காரைதீவு, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களுக்கான குழாய் நீர் விநியோகம் குறைந்த அழுத்தத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. சில இடங்களில் முற்றாக தடைப்பட்டும் உள்ளது. இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

# அடைக்கலம் தேடிய காட்டு யானைகளால் குடியிருப்புக்கள் சேதம்



(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

சமீபத்திய சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளத்தினால் காட்டு யானைகள் தாழ்நிலப் பகுதிகளிலிருந்து மேடான மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி அடைக்கலம் புகுந்துள்ளடன் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளதாக பாதிக்கப் பட்டோர் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பு – செங்கலடி, கொம்மாதுறைதீவுப் பகுதியில் அடைக்கலம் தேடிய காட்டு யானைகள் அங்குள்ள மக்களின் குடிசைகளைச் சேதப்படுத்தி பயிர்களையும் துவம்சம் செய்துள்ளதாக பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர். சில நாட்களாக இப்பகுதியில் அலைந்து திரியும் காட்டு யானைகளால் தாம் இராப் பொழுதை மிகுந்த அச்சமும் பீதியும் கலந்த உயிர்ப்போராட் டத்தில் கழிக்க வேண்டியுள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். வறிய மக்களின் வாழ்வும் வாழ்வாதாரமும் சமீபத்திய இயற்கை இடரினால் பல்வேறு வழிகளில் பாதிப்பைச் சந்தித்து வருகிறது.

# மரத்திலிருந்து விழுந்து சிறுமி மரணம்

## கிண்ணியாவில் சோகம்



(கியாஸ் ஷாபி)

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, ஆயிலிடி கிராம சேவக பிரிவில், மரத்தில் ஏறிய சிறுமி விழுந்து மரணமான சம்பவம் ஒன்று, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (30) பகல் இடம்பெற்றுள்ளதாகபொலிசார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

ஆயிலிடி பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயதான ரிஷ்வான் பாத்திமா ரிப்கத் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவர் வான்எல புகாரி நகர் வித்தியாலயத்தில் தரம் ஆறில் கல்வி கற்று வருபவராவார்.

இந்தச் சிறுமி, தனது வீட்டு முற்றத்தில் உள்ள மாமரத்தில் ஏறி, மாங்காய் பறித்து கொண்டு இருந்த போதே, தவறி விழுந்து, பாராங்கல்லில் தலை அடிபட்டு, உயிரிழந்ததாக, உறவினர்களால் பொலிஸில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சம்பவம் குறித்து,மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வான்எல பொலிஸார் தெரிவித்தனர்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு நிவாரண உதவி



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)


சீரற்ற காலநிலையின் காரணமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மண்முனை வடக்கு – சத்துருக்கொண்டான் மக்களுக்கு ஒரு தொகுதி உலருணவுப் பொதிகள் மாவட்டச் செயலாளர் ஜஸ்டினா ஜுலேகா தலைமையிலான குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

புளியடிமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இடைத்தங்கல் முகாமில் உள்ளவர்களுக்கு இவ்விதமான 102 உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உலருணவு நிவாரணப் பொதிகள் மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநரினால் மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டவையாகும்.

# பதில் கல்விப்பணிப்பாளராக ஹசந்தி நியமனம்

## இன்று கடமையேற்கிறார்



(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளராக எஸ்.ஆர்.ஹசந்தி கிழக்கு மாகாண ஆளுநரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் தர அதிகாரியான இவர் சிரேஷ்ட அடிப்படையில் நிரந்தர மாகாண கல்விப்பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை அம்பாறை வலயக்கல்விப்பணிப்பாளர் கடமைக்கு மேலதிகமாக இப்பதவியை வகிக்குமாறு கோரப்பட்டுள்ளார். இப்பதவியை இன்று(02) இவர் திருகோணமலை மாகாணக் கல்வித் திணைக்களத்தில் ஏற்றுக்கொள்கிறார்.

கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய சுஜாதா குலேந்திரகுமார் இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் தர விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்று கல்வி அமைச்சுக்கு இடமாற்றப்பட்டதையடுத்து கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடமானது.

வடக்கு– கிழக்கு இணைந்த மாகாண சபை, கிழக்கு மாகாண சபை என்பன உருவாக்கப்பட்டு சுமார் 37 வருட காலத்தில் மாகாண கல்விப்பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ள முதலாவது சிங்கள மொழி மூல அதிகாரி இவராவார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் 2005ம் ஆண்டு இலங்கை கல்வி நிருவாக சேவை மூன்றாம் தரத்திற்கு திறந்த போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டவராவார்.

# சீரற்ற காலநிலை: சிறுவர் விடுதிக்கு மருந்து பொருள்கள் அன்பளிப்பு

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு – ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் நிலவும் அத்தியாவசிய மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் அவசர உதவியாக சிறுவர்களுக்கு தேவையான ஒரு தொகுதி மருந்துப் பொருட்கள் முன்னாள் இராஜாங்க அமைச்சர அலி ஸாஹிர் மௌலானாவினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

Theophylline syrup போன்றவற்றை குறை நிவர்த்திக்கும் வகையில் தனது சொந்த நிதியில் கொள்வனவு செய்து ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் நிருவாகம் சார்பில் வைத்தியர்கள் சிறுவர் விடுதிக்கான தாதிய உத்தியோகத்தர் அடங்கிய குழுவிடம் சுமார் 60 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இந்த மருந்துப் பொருள் தொகுதி கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையின் இடராயத்த செயற்பாடுகளில் ஒரு அங்கமாக சிறுவர்கள் மத்தியில் தற்போது வேகமாக பரவும் ஒரு வகை வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்தவும், வைத்தியசாலையின் சிறுவர் விடுதியில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பிலும் கவனமெடுத்து இந்த மருத்துவ உதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சனத்திரலுக்கு மத்தியில் ஜனாஸா நல்லடக்கம்



(சம்மாந்துறை நிருபர்)

மாவடிப்பள்ளி பகுதியில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போன நிந்தவூர் அரபுக் கல்லூரியின் மாணவன் சம்மாந்துறையைச் சேர்ந்த கலீல் முகம்மட் தஷ்ரீகினின் ஜனாஸா ஐந்து நாட்களின் பின்னர் நேற்றுமுன்தினம்(30) மீட்கப்பட்டது. பின்னர், சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தின் மைதானத்தில் பெருந்திரளான மக்கள் பிரசன்னத்துடன் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டு சம்மாந்துறை முஅல்லா மஹல்லாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸாத் தொழுகையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டதுடன், விசேட துஆப்பிரார்த்தனையும் இடம்பெற்றது.

# மத்ரஸா மாணவர்களின் வீடுகளுக்கு ஆளுநர் விஜயம்

## நஷ்டஈடு வழங்கி வைப்பு





(சம்மாந்துறை நிருபர்)

காரைதீவு மாவடிப்பள்ளி பாலத்திற் கருகில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த சம்மாந்துறையிலுள்ள மத்ரஸா மாணவர்களின் வீடுகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னாயக்க நேற்றுமுன்தினம்(30) விஜயம் செய்து அரசா ங்கத்தின் சார்பில் தனது அனுதாபங்களைத் தெரிவித்தார்.

இதன் போது இவர்களுக்கான நஷ்ட ஈட்டு உதவித் தொகைக்கான காசோலைகளையும் வழங்கி வைத்தார் .

இதன்போது, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம, சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எம்.எம். ஹனீபா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மாட்டுப்பள்ளை பாலத்தினை திருத்துவதற்கான நடவடிக்கை

(சுலைமான் றாபி)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த வாரம் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் சேதமடைந்த பாதைகள், பாலங்கள் என்பற்றை நேரில் சென்று பார்வையிடுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் பொறியியலாளர் பி.பாஸ்கரன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (30) அம்பாறை மாவட்டத்திற்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேலதிக மாகாண பணிப்பாளர் காரியாலயத்தின் மாகாண பணிப்பாளர் எம்.பி அலியாரின் அழைப்பின் பேரில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் பி.பாஸ்கரன், மேலதிக பணிப்பாளர் நாயகம் (ஏ.யு.எம்) பொறியியலாளர் அபேதீர உள்ளிட்ட குழுவினர் இந்த பகுதிக்கு நேரில் சென்று விஜயம் செய்தனர்.

குறிப்பாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிந்தவூர் பிரதான வீதியில் காணப்படும் மாட்டுப்பள்ளை பாலத்தினை உடனடியாக திருத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதுடன், மாற்று வழிப் பாதை அமைப்பதற்கான வேலைத்திட்டமும் நேற்று முன்தினமே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் பின்னர் சம்மாந்துறை – மல்கம்பட்டி திகவாப்பி வீதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாதைகள் மற்றும் கல்வெட்டு என்பவைகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், இவைகளை உடனடியாக புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாகாண பணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.இதேவேளை வீதி அதிகார சபையில் தலைமைக் காரியாலயத்திருந்து பாலங்கள் வடிவமைப்பு குழுவினர்கள் விரைவில் அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்யவுள்ளதுடன் பாலத்தினை நிரந்தரமாக அமைப்பதற்கான பூர்வாங்க வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளனர்.

இதேவேளை மாவடிப்பள்ளி பிரதேத்தில் அண்மையில் அனர்த்தம் இடம்பெற்ற பகுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டதுடன், எதிர்காலத்தில் அது போன்ற அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான வேலைத்திட்டங்களையும் ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டார்.



இந்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேலதிக பணிப்பாளர் நாயகம் அபேதீர, மாகாண பணிப்பாளர் எம்.பி அலியார், பிரதம பொறியியலாளர் ரி.சிவசுப்ரமணியம், நிறைவேற்றுப் பொறியியலாளர்களான இசட் ஏ.எம் அஸ்மிர், யூ.ஏ பாரி உள்ளிட்ட அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# நாளுக்கு நாள் அதிகரிக்கும் மரக்கறிகளின் விலை

நுவரெலியா மாவட்டத்தில் நிலவிய சீரற்ற காலநிலையையடுத்து நுவரெலியா மத்திய சந்தையிலும் வீதியோர மரக்கறி விற்பனை நிலையங்களில் மக்கறிகளின் விலை வெகுவாக அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கடும் மழை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் பெருமளவான மரக்கறி தோட்டங்கள் நீரில் மூழ்கியதால் பயிரிடப்பட்ட நிலங்கள் அழிவடைவதால் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நுவரெலியா மத்திய சந்தையில் ஒரு கிலோகிராம் போஞ்சியின் மொத்த விற்பனை விலை 650 முதல் 750 ரூபா வரையிலும் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாயின் விற்பனை விலை 1200 முதல் 1300 ரூபா வரையிலும் உயர்ந்துள்ளதுடன் ஏனைய மரக்கறி வகைகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுவதாக தெரியவருகிறது. நுவரெலியா மத்திய சந்தைக்கு வரும் அதிகமானவர்கள் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு காரணமாக மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து வருகின்றனர்.



அத்துடன் நுகர்வோர் எண்ணிக்கையும் வெகுவாக குறைந்துள்ளதால் வர்த்தகர்கள் வியாபாரம் இன்றியும் பல மரக்கறிகள் இரண்டு மூன்று நாட்களின் பின் பழுதடைவதால் பாரிய நட்டம் ஏற்படுவதாகவும் பழுதடையும் பெருமளவிலான மரக்கறிகளை தினமும் குப்பையில் போடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.





அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நுவரெலியா வை. எம். எம். ஏ. பேரவையின் ஏற்பாட்டில் "இரத்த தானம் செய்வோம் உயிரைக் காப்பாற்றுவோம்" எனும் தொனிப்பொருளில் 10ஆவது தடவையாகவும் நேற்று முன்தினம் (30) நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

**(படங்கள் டி,சந்ரு, செ.திவாகரன் நானுஓயா நிருபர்)**

# உற்பத்தி - காலாவதி திகதிகள் மாற்றப்பட்ட பொருட்கள் கைப்பற்றல்



கம்பஹா பிரதேசத்தில் உள்ள களஞ்சியசாலையில் உற்பத்தி திகதி மற்றும் காலாவதியாகும் திகதிகள் மாற்றப்பட்டு பண்டிகைக் காலங்களில் சந்தைக்கு விடுவதற்கு தயாராக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட கடலை, அரிசி மற்றும் பேரிச்சம் பழங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரக்கோன் தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகாரசபையின் கம்பஹா மாவட்ட அலுவலக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், நுகர்வோர் சட்ட திட்டங்களுக்கமைய வர்த்தகர்கள் குற்றமிழைத்துள்ளதால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சமரக்கோன்மேலும் தெரிவித்தார்.

# அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்





நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டதுடன் உலர் உணவு பொருட்களையும் வழங்கி வைத்துள்ளார். இதில் முதற்கட்டமாக டிக்கோயா, பொகவந்தலாவ, அக்கரபத்தனை ஆகிய பகுதி மக்களுக்கான நிவாரண பொதிகள் நேற்று முன்தினம் (30) வழங்கி வைக்கப்பட்டன. மேலும் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு தேவையான வசதிகளை செய்துக் கொடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார். இதன்போது இ.தொ.கா பிரதி தலைவர் அனுஷா சிவராஜா, போசகர் சிவராஜா, ஆகியோரும் சென்றிருந்தனர்.

# சுதுமலை கோர விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம் சுதுமலை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் , பிறப்பு, இறப்பு பதிவாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மானிப்பாய் வீதி, தாவடி கிழக்கு, கொக்குவில் பகுதியைச் சேர்ந்த அன்னலிங்கம் செந்தில்குமரேசன் (வயது 64) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்த சம்பவம் தாவடி வீதியில் அமைந்துள்ள சுதுமலைப் பகுதியிலே நேற்று முன்தினம் (30) இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் மானிப்பாயில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளில் எதிரே வந்த கார் மோதியதாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது. இதன் போது அம்பியுலன்ஸ் வண்டிக்கு அறிவித்துள்ள போதிலும் 30 நிமிடங்களின் பின்னரே அம்பியுலன்ஸ் வண்டி குறித்த இடத்திற்கு வருகை தந்த நிலையில் விபத்தில் சிக்கிய நபரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் உயிரிழந்துள்ளார்.

நோயாளரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருந்தால் அந்த நபரை காப்பாற்றியிருக்கலாம் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட 11 மில். ரூபா அனுமதியின்றி செலவு

(ஜதுர்சிகா)

வடக்கு மாகாணத்தின் பாரிய நீர்ப்பாசன குளமாகவும் கிளிநொச்சி மாவட்டத்தின் முதன்மையான விவசாய குளமாகவும் காணப்படுகின்ற இரணைமடு குளத்தின் கீழ் உள்ள விவசாயிகளிடமிருந்து கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட 11 மில்லியன் ரூபா நிதி எந்த திணைக்கள அதிகாரிகளின் அனுமதியின்றி செலவிடப்பட்டுள்ளதாக தகவலறியும் சட்டத்தின் கீழ் கண்டறியப்பட்டுள்ளது

அதாவது கடந்த 2015ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் குறித்த நிதிகளை அறவிடுவதற்கு உரிய தீர்மானங்கள் மாவட்ட பயிர் செய்கை குழு கூட்டங்களிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதனை செலவு செய்வதற்கு எந்த அனுமதிகளும் பெறப்படவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது இவ்வாறு சுமார் 11 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கின்றது

இவ்வாறு இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தினால் அறவிடப்பட்ட நிதியானது உரிய திணைக்களங்களின் அனுமதி பெறப்படாமல் வங்கிகளில் நிதி வைப்பு செய்யபடாமலும் முறையற்ற விதத்திலே செலவு செய்யப்பட்டிருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

# கொட்டாவையில் ஹெரோயினுடன் ஒருவர் கைது







வெளிநாட்டில் இருந்து இலங்கையில் போதைப்பொருள் கடத்தலை முன்னெடுத்து வரும் விமல் சாந்த எனப்படும் உனகுருவே சாந்தவின் பிரதான சகபாடியான ஒருவர் ஹெரோயினுடன் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் (புலனாய்வு விசேட நடவடிக்கைகள் போதைப்பொருள் எதிர்ப்பு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள்) வழிநடத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தர உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் இராணுவ புலனாய்வு பிரிவின் குழுவுடன் இணைந்து வெள்ளிக்கிழமை கொட்டாவ பொலிஸ் பகுதியில் மக்கள் வங்கிக்கு முன்பாக உள்ள பாதசாரி கடவையில் அதிரடி சோதனை நடத்தப்பட்டுள்ளது.

அச்சந்தர்ப்பத்தில் காரொன்றில் 50 கிராம் 750 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை கடத்திச் சென்ற ஹதுருவெல பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவர் கையடக்கத் தொலைபேசியுடன் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக கொட்டாவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தற்போது வெளிநாட்டில் இருந்து பாரியளவில் போதைப்பொருள் கடத்தலை நடத்தி வரும் உனகுருவே சாந்த எனப்படும் விமல் சாந்தவின் பிரதான சீடன் என தெரியவருகிறது.

# ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் கட்டுப்பாட்டில்

## அரச கால்நடை மருத்துவர்கள் சங்கத் தலைவர் தெரிவிப்பு

ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அரச கால்நடை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் டொக்டர் சிசிர பியசிறி தெரிவித்துள்ளார். நோயினால் பாதிக்கப்படாத பண்ணைகளில் உள்ள இறைச்சியை தனிமைப்படுத்தல் முறையின் கீழ் மனித பாவனைக்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். மேலும், ஆபிரிக்க பன்றிக்காய்ச்சலால் பல பண்ணைகள் முற்றாக அழிந்துள்ளதாகவும் உரிமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதனால் தமது தொழில்களை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் நஷ்டஈடு வழங்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.


## மாதிவல வீட்டுத் தொகுதி:

# கூட்டு பயன்பாட்டு முறையில் உத்தியோகபூர்வ வீடுகள்

உத்தியோகபூர்வ வீடுகள் தேவையான தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு , மாதிவல வீட்டுத் தொகுதியில் காணப்படும் வீடுகளை கூட்டு பயன்பாட்டு முறைமையின் கீழ் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வீடுகள் வழங்கப்படுவதில்லை எனவும் கூறப்படுகிறது. எம்.பி.க்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த வரியில்லா வாகன அனுமதிப்பத்திரத்தை வழங்காமல், பதவிக்காலம் நிறைவடைந்ததன் பின்னர் மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்ககூடிய விதத்தில் அரசாங்க வாகனத்தை வழங்கும் வேலைத்திட்டம் எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் குறைக்கப்படுவது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி வழங்கிய தேர்தல் வாக்குறுதிக்கு அமைவாகவே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. மாதிவலயில் 120 உத்தியோகபூர்வ வீடுகள் உள்ளன, அதில் 112 வீடுகள் மட்டுமே மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்றன.

# இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

## பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நடவடிக்கை





(சிவா ஸ்ரீதரராவ்)

இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் ஆராய பிரதியமைச்சர் வெள்ளிக்கிழமை (29) அப்பகுதிகளுக்கு நேரடி விஜயம் மேற்கொண்டார்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பல பிரதேசங்களில் சீரற்ற காலநிலையால் பல அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்தோடு மண்சரிவு அபாயம் அதிகம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என மக்களுக்கு உறுதியளித்த அமைச்சர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

# ‘புயல் காலத்திலும் தலைநகர் சென்னை இப்போது நிம்மதியாக இருக்கிறது’

## முதல்வர் ஸ்டாலின்

“அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் மழை பாதிப்புகள் தவிர்க்கப்பட்டது. புயல் காலத்திலும் தலைநகர் சென்னை இப்போது நிம்மதியாக இருக்கிறது.” என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். வங்கக் கடலில் உருவான “ஃபெங்கல் புயல்” காரணமாக சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்ததைத் தொடர்ந்து, உடனடியாக, முதல்வர் ஸ்டாலின் நேற்று (30.11.2024) சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் அமைந்துள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, ஆய்வு மேற்கொண்டார். கனமழை எச்சரிக்கையின் காரணமாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காணொளிக் காட்சி வாயிலாக திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டு, மழை நீரை உடனடியாக வெளியேற்றநடிவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும், பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை முன்கூட்டியே நிவாரண முகாம்களில் தங்க வைத்து, அவர்களுக்கு உணவு, பாதுகாப்பான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்குமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கினார். பின்னர், தலைமைச் செயலகத்திற்கு சென்று உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து, ராயபுரம், சூரியநாராயணன் தெருவில் அமைந்துள்ள




ஒருங்கிணைந்த உணவுக்கூடத்திற்கு நேரில் சென்று, பொதுமக்களுக்கு வழங்குவதற்காக உணவு தயாரிக்கப்படும் பணிகளையும், பூக்கடை பேருந்து நிலையம் மற்றும் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ஆகிய இடங்களில் உள்ள கழிவுநீர் உந்து நிலையத்திற்கு நேரில் சென்று, மழைநீர் மற்றும் கழிவுநீர் வெளியேற்றப்படும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, மழைநீரை உடனடியாக அகற்றுமாறு அதிகாரிகளுக்கு உத்திரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பெங்களூரை நடுங்க வைக்கப்போகும் குளிர்

ஃபெங்கல் புயல் காரணமாக பெங்களூரில் அடுத்த சில நாட்களில் வெப்பநிலை குறைந்து குளிர் அதிகரிக்கும் என்று பெங்களூர் வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இதனால் பொதுமக்கள் கவனமாக இருக்க எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக பெங்களூார் வானிலை ஆய்வு மையம், பெங்களூரில் அடுத்த சில நாட்கள் அதிகபட்ச வெப்பநிலை என்பது 20 முதல் 21 டிகிரி செல்சியஸ் என்ற அளவில் தான் இருக்கும். இந்த வெப்பநிலை என்பது 25 டிகிரி செல்சியஸை தாண்ட வாய்ப்பில்லை. இதனால் இரவில் குளிர் என்பது அதிகரிக்கும்“ என்று தெரிவித்துள்ளது.

இதுபற்றி பெங்களூரில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மையத்தின் விஞ்ஞானி “எப்” டாக்டர் புவியரசன் கூறுகையில், “பெஞ்சல்புயலால்” பெங்களூரில் காலநிலை மாற்றமடைந்துள்ளது. புயல் வரும்போது அதிகபட்ச வெப்பநிலை குறைந்து குளிர் ஏற்படும். இதனால் அடுத்த சில நாட்கள் அதிகபட்ச வெப்பநிலை என்பது 24-25 டிகிரி செல்சியஸை தாண்டாது. அதேபோல் குளிர்காலம் என்பது வரும் டிசம்பர் மாதம் 15ம் திகதி அல்லது அதற்கு பிறகு பெங்களூர் மற்றும் தெற்கு கர்நாடகா மாவட்டங்களில் தொடங்கும். அதுவரை வடகிழக்கு காற்று என்பது தொடர்ச்சியாக இருக்கும். புயல் காரணமாக கடலில் இருந்து வடகிழக்கு காற்று என்பது கிடைக்கிறது. இந்த காற்று வேகம் குறைந்தவுடன் பற்றி சரியாக கூற முடியும் ““ என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ‘என்மீது வீசப்பட்ட திரவம் பாதிப்பில்லாதது, ஆனால்....’ அரவிந்த் கேஜ்ரிவால்

என்மீது வீசப்பட்ட திரவம் பாதிப்பில்லாதது ஆனால் ஆபத்தானதாக இருக்கலாம் என்று டெல்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் தெரிவித்துள்ளார். மேலும் பாஜக தலைமையிலான பாஜக அரசு சட்ட ஒழுங்கை பாதுகாப்பதில் செலற்றுவிட்டதாக குற்றம்சாட்டினார். டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த கேஜ்ரிவால் கூறுகையில், என்மீது வீசப்பட்ட திரவம் பாதிப்பில்லாதது என்றாலும் ஆபத்தானதாக இருக்கலாம். கடந்த 35 நாட்களில் என்மீதான மூன்றாவது தாக்குதல் இது. குற்றவாளிகளை விட புகார் கொடுப்பவர்கள் கைது நடவடிக்கையை எதிர்கொள்வார்கள் என்ற செய்தியினை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அனுப்பியுள்ளார்.

# ஃபெங்கல் புயல் இந்திய கரையை கடந்தது

ஃபெங்கல் புயல் புதுச்சேரி அருகே கடந்த சனிக்கிழமை இரவு 10.30 முதல் 11.30 மணி வரையிலான இடைபட்ட நேரத்தில் கரையைக் கடந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் கரையை கடக்கும்போது 70-80 கி.மீ வேகத்தில் காற்று வீசியது. அவ்வப்போது 90 கி.மீ வேகத்திலும் காற்று வீசியது. மேற்கு - தென்மேற்கு திசையில் புயல் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வட தமிழகத்தின் கடலோர பகுதிகளில் கனமழை பெய்ததையடுத்து தென்மேற்கு வங்க கடலில் நிலை கொண்டிருந்த இந்த புயல், 6 மணிநேரத்தில் மெதுவாக நகர்ந்து வந்து கரையை கடந்துள்ளது.

# பெங்கல் புயல் மாமல்லபுரம்-புதுச்சேரி இடையே நேற்று கரையைக் கடந்தது.

வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு புயலாக வலுப்பெற்றது. இந்த புயலுக்கு “ஃபெங்கல்“ என பெயர் சூட்டப்பட்டது. இந்த புயல் நேற்று இரவு மாமல்லபுரம்-புதுச்சேரி இடையே கரையைக் கடந்தது. இதனால் சென்னை உள்பட வடமாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் சூறைக்காற்றுடன் கனமழை கொட்டியது. ஃபெங்கல் புயல் காரணமாக பெய்த பெருமழையால் சென்னை, கடலூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், கரையைக் கடந்த ஃபெங்கல் புயல் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்துள்ளது. கடந்த 12 மணி நேரமாக நகராமல் புதுச்சேரிக்கு அருகே மையம் கொண்டுள்ளது.

# மதமாற்ற தடைச்சட்டம் அமுல் ராஜஸ்தான் அமைச்சரவை அனுமதி

கட்டாய மதமாற்றத்தை தடுக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ள மதமாற்ற தடை சட்டமூலத்திற்கு இந்தியாவின் ராஜஸ்தான் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இந்த சட்டமூலம் எதிர்வரும் கூட்டத்தொடரில் சட்டசபையில் தாக்கல் செய்யப்படவுள்ளது. கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவோருக்கு 1 முதல் 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதை இந்த சட்டம் உறுதி செய்கிறது.

இது குறித்து ராஜஸ்தான் முதல்-அமைச்சர் பஜன் லால் சர்மா “எக்ஸ்“ தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

”கட்டாய மதமாற்றத்தை தடுப்பதில் ராஜஸ்தான் மாநில அரசு உறுதியாக இருக்கிறது. இதன்படி சட்டமன்றத்தில் “ராஜஸ்தான் சட்டவிரோத மதமாற்ற தடை சட்ட மசோதா- 2024“ ஐ தாக்கல் செய்ய அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

தவறான தகவல், மோசடி அல்லது கட்டாயத்தின் அடிப்படையில் ஒரு நபரின் மதத்தை மாற்றும் முயற்சியை இந்த சட்ட மூலம் தடை செய்கிறது. சட்டவிரோத மதமாற்றத்திற்காக ஒரு திருமணம் நடத்தப்பட்டால், அந்த திருமணத்தை செல்லாது என அறிவிக்கும் உரிமை குடும்ப நீதிமன்றங்களுக்கு வழங்கப்படும்” என்று பதிவிட்டுள்ளார்.



மேலும் இது குறித்து துணை முதல்-அமைச்சர் பிரேம் சந்த் பைரவா கூறுகையில்,

”மக்கள் தங்களுக்கு அறிமுகமில்லாத மதங்கள் மீது கவர்ந்திழுக்கப்படுகிறார்கள். கட்டாய மதமாற்றத்தை தடுக்கும் விதமாக பிற மாநிலங்களில் இருக்கும் கொள்கைகளை பரிசீலித்து, கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை வழங்கும் வகையில் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது” என்றார்.



# ஃபெங்கல் புயல்: விழுப்புரத்தில் கொட்டித் தீர்த்த கனமழை; வீடூர் அணை திறப்பு

## இயல்பு வாழ்க்கை பாதிப்பு

விழுப்புரம் மாவட்டத்தில் கனமழை கொட்டித் தீர்த்தது. மேலும் வீடூர் அணை திறக்கப்பட்டதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த ஃபெங்கல் புயல் நேற்று இரவு புதுச்சேரி அருகே கரையைக் கடந்தது. விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் கடந்த 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் மாணவ - மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள், கல்லூரிகளுக்கும் 2 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டது. ஃபெங்கல் புயல் மற்றும் அதனால் பெய்யக்கூடிய கனமழையினால் ஏற்படும் பாதிப்புகளை சமாளிக்க விழுப்புரம் மாவட்ட நிர்வாகம் அனைத்து முன்எச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. குறிப்பாக மழையினால் பாதிக்கப்படுபவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்காக மாவட்டம் முழுவதும் 850 தற்காலிக மையங்கள் அமைக்கப்பட்டது. மேலும் மரக்காணம், வானூர் ஆகிய தாலுகாக்களில் 12 பல்நோக்கு புயல் பாதுகாப்பு மையங்கள் தயார்படுத்தப்பட்டு அந்த மையங்களில் பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதேவேளை, நேற்று இரவு முதல் விழுப்புரம் மாவட்டத்தில் இடைவிடாமல் கொட்டிய மழையால் சாலையெங்கும் மழைநீர் சூழ்ந்தது. இதனால் மாவட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டது. நேற்று காலை முதல் விழுப்புரம் மாவட்ட கிராமங்களில் சுமார் 30 மணி நேரமாக மின்சாரம் வழங்கப்படவில்லை. விக்கிரவாண்டி அருகே மேலகொந்தை கிராமத்தில் வெள்ளம் சூழந்துள்ளதால் அக்கிராம மக்கள் வீட்டுக்குள் முடங்கியுள்ளனர்.



# டொலர் மாத்திரமே பயன்படுத்த வேண்டும்
# பிரிக்ஸ் நாடுகளுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க டொலருக்கு பதிலாக மற்றொரு நாணயத்தை உருவாக்கவோ அல்லது ஆதரிக்கவோ கூடாது என பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் நாடுகள் 100 சதவீத வரிகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பிரிக்ஸ் உறுப்பு நாடுகள் புதிதாக எந்த நாணயத்தையும் உருவாக்கக் கூடாது. மேலும், ஏற்கனவே இருக்கும் வேறு நாட்டு நாணயத்தையும் பயன்படுத்த கூடாது.

சர்வதேச வியாபாரங்களுக்கு பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்க டொலரை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இதை மாற்ற நினைக்கும் நாடுகளுக்கு 100 சதவீதம் வரை கூடுதல் வரி விதிக்கப்படும்.

அவர்களுக்கு வேறொரு ஏமாளி கிடைத்தால் அவர்களுடன் வியாபாரம் செய்யட்டும். டொலர் வேண்டாம் என்றால் அமெரிக்காவுடன் உள்ள உறவையும் துண்டித்துக் கொள்ளுங்கள் என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பிரிக்ஸ் நாடுகள் டொலரை தவிர்க்க முயற்சிக்கும் போது நாங்கள் வேடிக்கை பார்த்த காலம் முடிந்து விட்டது.

இந்த நாடுகள் புதிய பிரிக்ஸ் நாணயத்தை உருவாக்கவோ அல்லது வலிமைமிக்க அமெரிக்க டொலருக்குப் பதிலாக வேறு எந்த நாணயத்தையும் உருவாக்க கூடாது. இதை மீறும் போது 100% கூடுதல் வரிகளை சந்திக்க வேண்டி இருக்கும்.



இல்லையெனில், அமெரிக்கப் பொருளாதாரத்தில் விற்பனை செய்வதிலிருந்து விடைபெற்று கொள்ளலாம்."

"அவர்கள் மற்றொரு ஏமாளியை தேடிக் கொள்ளலாம். சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்க டொலரை பிரிக்ஸ் மாற்றும் வாய்ப்பு இல்லை, இப்படி செய்ய நினைக்கும் நாடுகள் அமெரிக்காவிடம் இருந்து விடைபெற்றுக் கொள்ளலாம்," என்று குறிப்பிட்டுள்ளார்.




# ரஷ்யாவுக்கு, வடகொரியா ஆதரவளிக்கும் கிம் ஜோங் உன்



உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவுக்கு, வடகொரியா எப்போதும் ஆதரவளிக்கும் என அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷியா 2022 ஆம் ஆண்டு போர் தொடுத்தது.

இந்த போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் செயல்படுகின்றன. அவை ஆயுத உதவி, பொருளாதார உதவிகளை உக்ரைனுக்கு வழங்குகின்றன.

அதேபோல் ரஷ்யாவுக்கு அதன் நட்பு நாடான வடகொரியா ஆதரவாக உள்ளது. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களை ரஷ்யாவுக்கு வடகொரியா அனுப்பியது.

இரு நாடுகளுக்கிடையே கடுமையான போர் நிலவுவதாகல், 3 ஆம் உலகப்போர் ஏற்படும் அபாயம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பல நாடுகள் கவலை தெரிவித்தன.

இந்தநிலையில் ரஷ்ய இராணுவ அமைச்சர் ஆண்ட்ரே பெலோசோவ் தலைமையிலான குழுவினர் வடகொரியா சென்று அந்த நாட்டின் ஜனாதிபதி கிம் ஜோங் உன்ஜ சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது கிம் ஜோங் உன் கூறியதாவது, நேட்டோ கூட்டமைப்பின் பொறுப்பற்ற செயலுக்கு பதிலடி நடவடிக்கையே இந்த போர் ஆகும். எனவே உக்ரைனுக்கு எதிரான போரில் வடகொரியா எப்போதும் ரஷ்யாவுக்கு தனது ஆதரவை அளிக்கும்" என்றார்.

# உடனடி போர் நிறுத்தம் தேவை: பலஸ்தீனத்துக்கு பிரதமர் மோடி கடிதம்

பலஸ்தீனத்தில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும், அனைத்துவித தீவிரவாத நடவடிக்கைகளும் முடிவுக்கு வர வேண்டும், பலஸ்தீன மக்களுக்கு தொடர்ந்தும் மனிதாபிமான உதவிகள் கிடைக்க வேண்டும்" என பலஸ்தீனத்துக்கு பிரதமர் மோடி கடிதம் அனுப்பியுள்ளார்.

பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு, அந்நாட்டு அரசுக்கு பிரதமர் மோடி எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: பலஸ்தீன மக்களின் மேம்பாட்டுக்கு இந்தியா தொடர்ந்தும் தனது ஆதரவை தெரிவிக்கிறது. பலஸ்தீனத்தில் உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும். பிணைக் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அனைத்துவிதமான தீவிரவாத நடவடிக்கைகளும் முடிவுக்கு வர வேண்டும். காசாவில் நடைபெறும்



போர் மற்றும் உயிரிழப்பு சோகத்தையும், பலஸ்தீன மக்களுக்கு மிகுந்த கஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அங்கு தற்போது நிலவும் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நிலை குறித்து இந்தியா மிகுந்த கவலை கொள்கிறது. பலஸ்தீனத்தில் நீடித்த மற்றும் அமைதியான தீர்வு ஏற்பட தூதரக அளவிலான பேச்சுவார்த்தைதான் தீர்வு என்பதை இந்தியா உறுதியாக நம்புகிறது. இருதரப்பு பேச்சுவார்த்தை மூலமான தீர்வு, இறையாண்மையுடன் கூடிய சுதந்திரமான பலஸ்தீனம், இஸ்ரேலுடன் இணைந்து அமைதியாக வாழ்வதை இந்தியா ஆதரிக்கிறது. பலஸ்தீனத்தின் வளர்ச்சிக்கும் இந்தியா துணை நிற்கும். மக்களின் தேவைகளின் அடிப்படையில், மக்கள் மைய திட்டங்களை அமுல்படுத்துவதிலும் பலஸ்தீன மக்களுக்கு இந்தியா துணை நிற்கும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். பிரதமர் மோடியின் இந்த கருத்தை டெல்லியில் உள்ள பலஸ்தீன தூதரக அதிகாரிகள் வரவேற்றுள்ளனர்.

# மலேசியா மற்றும் தாய்லாந்தில் வெள்ளம் 12 பேர் உயிரிழப்பு

மலேசியா மற்றும் அண்டை நாடான தாய்லாந்தில் பெய்த பலத்த மழை காரணமாக 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மலேசியாவில் 122,000 இற்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தெற்கு தாய்லாந்தில், சுமார் 13,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

புயல் எச்சரிக்கை மற்றும் பலத்த மழை தொடர்ந்தும் பெய்து வரும் நிலையில் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மீட்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருதோடு தங்குமிடங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

தெற்கு தாய்லாந்தில் வெள்ளம் காரணமாக சுமார் 534,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளம் காரணமாக பேரிடர் ஏற்படக்கூடிய ஆறு மாகாணங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் ஒவ்வொரு மாகாணத்திற்கும் வெள்ள நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் விரைவாக இயல்புநிலையை மீட்டெடுப்பது அவசியம் எனவும் தாய்லாந்து பிரதமர் பேடோங்டர்ன் ஷினவத்ரா வலியுறுத்தியுள்ளார்.





# இஸ்ரேல்-லெபனான் போர்நிறுத்த ஒப்பந்தம் ஹெஸ்பொலா தலைவர் கருத்து

லெபனானில் உள்ள ஹெஸ்பொலா ஆயுதக்குழுவின் தலைவரான நயீம் காசிம், இஸ்ரேலுடனான போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்து முதல் முறையாகப் பொதுவெளியில் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் ஹெஸ்பொலாவுக்கு ஒரு "பெரிய வெற்றி" என்று கூறிய அவர், லெபனான் மக்கள் பொறுமையாக இருந்ததைப் பாராட்டினார்.

கடந்த 26 ஆம் திகதி இஸ்ரேலும் ஹெஸ்பொலாவும் போர்நிறுத்தம் குறித்த ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தன. இது 27 ஆம் திகதி புதன் கிழமையன்று அமுல்படுத்தப்பட்டது. இருப்பினும் இரு தரப்பினரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதாகக் குற்றம் சாட்டுகின்றனர்.



இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் பிரான்சும் மத்தியஸ்தம் செய்து கொண்டன.

அந்த நிபந்தனைகளில் 60 நாட்களுக்குள் ஹெஸ்பொலா அதன் படைகளையும் ஆயுதங்களையும் நீலக் கோடு (Blue Line) பகுதிக்கும் அங்கிருந்து வடக்கே 30 கிமீ தொலைவில் உள்ள லிடானி நதிக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்து திரும்பப் பெறும் என்றும், இஸ்ரேல் படிப்படியாக அங்கு எஞ்சியுள்ள தனது படைகளைத் திரும்பப் பெறும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மோசமான துடுப்பாட்டம்; தென்னாபிரிக்காவிடம் இலங்கை தோல்வி



டேர்பனில் இடம்பெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் 233 ஓட்டங்களால் இலங்கை அணியை வீழ்த்திய தென்னாப்பிரிக்கா அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியது.

இந்த தோல்வியால் மூன்றாம் இடத்திலிருந்த இலங்கை அணி 5ஆம் இடத்திற்கு கீழிறங்கியது.

சுற்றுலா இலங்கை அணிக்கும் தென்னாப்பிரிக்க அணிக்கும் இடையேயான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த 27ஆம் திகதி டேர்பனின் ஆரம்பித்திருந்தது. இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி, முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாப்பிரிக்க அணித் தலைவரான பவுமாவின் 70 ஓட்டங்களின் உதவியுடன் 190 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் அஷித பெர்ணான்டோ மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

அதனைத் தொடர்ந்து, தமது முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி வெறுமனே 13.5 ஓவர்களுக்கு மாத்திரம் முகம்கொடுத்து இலங்கை டெஸ்ட் வரலாற்றில் மிகக் குறைந்த ஓட்டங்கள் என்ற மோசமான சாதனையை பதிவு செய்து 42 ஓட்டங்களுக்கு சகல விக்கட்டுக்களையும் பறிகொடுத்தது. துடுப்பாட்டத்தில் கமிந்து மெண்டிஸ் 13 ஓட்டங்களையும், லஜிரு குமார 10 ஓட்டங்களையும் பெற மற்றைய 9 வீரர்களில் 5 வீரர்கள் ஓட்டமின்றி ஆட்டமிழக்க ஏனையோர் ஒற்றை இலக்கத்துடன் நடையைக் கட்டியிருந்தனர். பந்து வீச்சில் மார்கோ ஜென்ஸன் 7 விக்கெட்டுகளை அள்ளிச் சுருட்டினார்.

பின்னர் 148 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய தென்னாப்பிரிக்க அணிக்கு இளம் வீரரான ஸ்டெப்ஸ் சதம் கடந்து 122 ஓட்டங்களையும், பவுமா சதம் கடந்து 113 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 5 விக்கெட்டுகளை இழந்து 366 ஓட்டங்களைப் பெற்றிருக்க இன்னிங்ஸை முடித்துக் கொண்டது. பந்துவீச்சில் விஷ்வ மற்றும் பிரபாத் ஜெயசூரிய ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர் .

இதனால் தென்னாப்பிரிக்க அணியால் நிர்ணயிக்கப்பட்ட 516 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 282 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 233 ஓட்டங்களால் தோற்றுப் போனது. துடுப்பாட்டத்தில் சந்திமால் 83 ஓட்டங்களையும் , தனஞ்சய டி சில்வா 59 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மார்கோ ஜென்ஸன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்த வெற்றியினால் தென்னாப்பிரிக்க அணி இரு போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என முன்னிலை பெற்றதுடன் , உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தரப்படுத்தலில் 5ஆம் இடத்திலிருந்து 2ஆம் இடத்திற்கு முன்னேறியது.

மேலும் இப்போட்டியில் மோசமான துடுப்பாட்டத்தினால் தோற்றுப் போன இலங்கை அணி புள்ளிப் பட்டியலில் மூன்றாம் இடத்திலிருந்து 5ஆம் இடத்திற்கு கீழிறங்கியதுடன், டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெண்டுல்கரின் சாதனையை முறியடித்த இங்கிலாந்து வீரர்



**கனுஷியா புஷ்பகுமார்**

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு போட்டியின் நான்காவது இன்னிங்ஸில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற சச்சின் டெண்டுல்கரின் வாழ்நாள் சாதனையை இங்கிலாந்து அணி வீரர் ஜோ ரூட் தகர்த்துள்ளார்.

அதன்படி, சச்சின் டெண்டுல்கரின் 1625 ஓட்டங்கள் என்ற சாதனையை தகர்த்து ஜோ ரூட் 1630 ஓட்டங்களுடன் முதலிடத்தை பெற்றுள்ளார்.

சச்சின் டெண்டுல்கர் 60 இன்னிங்ஸில் 1625 ஓட்டங்கள் சாதனை படைத்த நிலையில், ஜோ ரூட் 49 இன்னிங்ஸில் குறித்த சாதனையை முறியடித்துள்ளார்.

நியூசிலாந்து சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கட் அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கிறிஸ்ட்சர்ச்சில் நடைபெற்றது. இதில் எட்டு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றியை பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# பின்னடைவை சந்தித்த நியூசிலாந்து

2025 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான புள்ளிப் பட்டியலில் நியூசிலாந்து பின்னடைவை சந்தித்துள்ளது.

2025 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் நேரடியாக இறுதிப் போட்டிக்கு முன்னேறும். எனினும், குறித்த இரு இடங்களுக்காக, இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே போட்டி இடம்பெற்று வந்தது.

இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

நியூசிலாந்து அணிக்கு இங்கிலாந்து அணியுடன் மேலும் இரு டெஸ்ட் போட்டிகள் காணப்படும் நிலையில், 2025 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் நியூசிலாந்து அணிக்கு அனைத்து போட்டிகளும் நிறைவடைகின்றன.

இறுதி இரு போட்டிகளையும் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றாலும் கூட அது சாத்தியமில்லை.

தற்போது இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் இலங்கை ஆகிய அணிகளுக்கு இடையே போட்டி நிலவி வருகிறது.



# ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தலைவர் விராட் கோலி?






2025ஆம் ஆண்டுக்கான இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தலைவர் விராட் கோலி தான் என இந்திய முன்னணி கிரிக்கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் உறுதியாக கூறியுள்ளார்.

இம்முறை பெங்களூர் அணி மிகச்சிறப்பாக ஏலத்தில் கலுந்துக் கொண்டு அருமையான வீரர்களை வாங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், ஆர்.சி.பி அணியில் தலைமைப் பதவியில் அனுபவம் உள்ள ஒரு வீரரை உள்வாங்காத காரணத்தினால் நிச்சயம் விராட் கோலி அணியின் தலைவராக இருப்பார் என உறுதியாக நம்புவதாகவும் ரவிச்சந்திரன் அஸ்வின் கூறியுள்ளார்.

ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியானது ஏலத்திற்கு முன்பாக விராட் கோலி, ரஜத் படிதார் மற்றும் யாஷ் தயாள் ஆகிய 3 வீரர்களை மட்டுமே தக்க வைத்திருந்தது.

ஐ.பி.எல் 2025 தொடருக்கான வீரர்களின் மெகா ஏலம் சவுதி அரேபியாவில் கடந்த 24 மற்றும் 25ஆம் திகதிகளில் இடம்பெற்றிருந்தது.

இந்த ஏலத்தில் 577 வீரர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தொடக்க வீரர் மரணம்




அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தொடக்க வீரர் இயன் ரெட்பாத் உயிரிழந்துள்ளார்.

அவருக்கு 83 வயது ஆன நிலையில், வயது மூப்பு காரணமாக அவர் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரக்கெட் சபை தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் இதனை அறிவித்துள்ளது.

இயன் ரெட்பாத் 1964ஆம் ஆண்டு தொடக்கம் 1976ஆம் ஆண்டு வரை அவுஸ்திரேலிய அணிக்காக விளையாடியுள்ளார்.

66 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8 சதங்கள் மற்றும் 31 அரை சதங்களுடன் 4797 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஐந்து ஒருநாள் போட்டிகளிலும் அவர் விளையாடியுள்ளார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 02ம் திகதி திங்கட்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.